Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JANUARY 5, 2023

வியாழக்கிழமை ஜனவரி 05, 2023 | ஒளி: 08 கதிர்: 180 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

ஜனவரி 18 முதல் 21 வரை

சின்னத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல்

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஜனவரி 18ஆம் திகதி முதல் ஜனவரி 21ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும், 20ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை கட்டுப்பணத்தைச் செலுத்த முடியும் எனவும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

தபால் வாக்கு விண்ணப்பிக்க

ஜனவரி 23 இறுதி நாள்

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் ஜனவரி 23ஆம் திகதி என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதற்கமைய, தபால் மூல வாக்களிப்புக்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் ஜனவரி 23 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னதாக தங்களின் நிறுவன தலைவர்கள் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

ஷாப்டர் மரண விவகாரம்

மூடிய அறைக்குள் இரகசிய சாட்சியம்

பிரபல வர்த்தகரான தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான நீதவான் விசாரணை, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தின் மேலதிக நீதவானின் மூடிய அறையில் புதன்கிழமை (04) இரகசியமாக இடம்பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மரணமடைந்தவரின் தரப்பினரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க, தனது உத்தியோகபூர்வ அறையில் நீதவான் விசாரணை இடம்பெறும் என்று கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய அறிவித்தார்.

தொடர்ச்சி P2

அதிவேக நெடுஞ்சாலை

பஸ் கட்டணங்கள் குறைப்பு

பா.நிரோஸ்

அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் பஸ் கட்டணங்கள் நேற்று (04) நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன, தனியார் பஸ் கட்டணங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அமைச்சர், நாட்டில் ஏற்பட்டுள்ள பணவீக்கம் காரணமாக, போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டு உள்ளதால், அவற்றை இறக்குமதி செய்வதில் பாரிய செலவுகள் ஏற்பட்டுள்ளன. இதுபோன்ற காரணங்களால் உள்ளாட்டிலும் எரிபொருட்களின் விலை அதிகரித்துள்ளன எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

கடும் தீர்மானங்களை எடுக்கவே நேரிடும்

இ. நா உதவி பொதுச் செயலாளர் திருமதி கன்னி விக்னராஜா தெரிவிப்பு

இலங்கைக்கு நீண்டகால அடிப்படையில் முன்னேறுவதற்கும் நாட்டின் எதிர்காலப் பயணத்தை உறுதி செய்வதற்கும் கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருக்கும் என ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளர் திருமதி கன்னி விக்னராஜா, ஜனாதிபதி ரணிலிடத்தில் தெரிவித்துள்ளார்

ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளர் திருமதி கன்னி விக்னராஜா உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு, ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று (04) முற்பகல் சந்தித்தது.

நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு, ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பாராட்டிய உதவி பொதுச் செயலாளர், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் தொடரும் என்றும் உறுதியளித்தார்.

இலங்கையின் புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து இங்கு விசேடமாக கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கைக்கு நீண்டகால அடிப்படையில் முன்னேறுவதற்கும் நாட்டின் எதிர்காலப் பயணத்தை உறுதி செய்வதற்கும் கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருக்கும் என்பதை உதவி பொதுச் செயலாளர் உள்ளிட்ட தூதுக்குழு ஏற்றுக்கொண்டது.

தொடர்ச்சி P2

நொண்டி சாட்டுகளுக்கு கரிசனை செலுத்தாதீர்

சாணக்கியன் தெரிவிப்பு; மாற்றத்துக்காக போராடியவர்களை தேர்தலுக்கு தயாராகுமாறு அழைப்பு

மாற்றத்திற்காக போராடியவர்கள் அனைவரும் தேர்தலுக்கு தயாராக வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான தேசிய எல்லை நிர்ணய குழுவை நேற்று (04) சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

தொடர்ச்சி P2

'கஞ்சிப்பானை' இம்ரானின்

பிணையாளர்களுக்கு அழைப்பாணை

பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ள 'கஞ்சிப்பானை' இம்ரான் என்றழைக்கப்படும் மொஹமட் நஜீம் இம்ரானின் பிணையாளர்களான அவரது சகோதரர் உள்ளிட்ட இருவருக்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், அழைப்பாணை பிறப்பிக்குமாறு புதன்கிழமை (04) உத்தரவிட்டது.

கொலை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 'கஞ்சிப்பானை' இம்ரான், வெளிநாட்டுப் பயணத் தடை உள்ளிட்ட நிபந்தனைகளுடன் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் கடந்த 20ஆம் திகதி விடுவிக்கப்பட்டார்.

பிணையில் விடுவிக்கப்பட்டு 5 நாள்களின் பின்னர் 'கஞ்சிப்பானை' இம்ரான், இராமேஸ்வரம் ஊடாக இந்தியாவுக்குள் பிரவேசித்துள்ளதாக இந்திய புலனாய்வுப்பிரிவு அறிவித்திருந்தது.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய ஒவ்வொரு மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையும் மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாக வேண்டும் என 'கஞ்சிப்பானை' இம்ரானுக்கு பிணை நிபந்தனை விதிக்கப்பட்ட போதும் அவர் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாக வில்லை என்று மன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

தொடர்ச்சி P2

சுற்றுலாப் பயணிகள் வருகை 7 இலட்சத்தை கடந்தது

கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் 2022 ஆம் ஆண்டில் இலங்கைக்கு மொத்தமாக 719, 978 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

2021 இல் பதிவு செய்யப்பட்ட 194,495 சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எனவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான அதிக எண்ணிக்கையிலான வருகை மார்ச் மாதத்தில் பதிவாகியுள்ளதாகவும், அந்த மாதத்தில் 106,500 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்றும்

தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், டிசெம்பரில் மொத்தம் 91,961 சுற்றுலாப் பயணிகள் வருகை பதிவாகியுள்ளது என்றும் அதிகார சபை தெரிவித்துள்ளது.



கொரோனாவின் புதிய உபபிறழ்வு 'கிராகன்'

தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிக்கிறது

'கிராகன்' என்று பெயரிடப்பட்டுள்ள கொரோனாவின் புதிய உபபிறழ்வானது உலகளாவிய ரீதியில் பரவிவருவதாகவும் அதனால் கொரோனா தொற்றுக்கு உள்ளானோரில் தொகை அதிகரித்துள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனத்தை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் மாறுபாட்டின் உப பிறழ்வான XBB1.5 எனப்படும் 'கிராகன்தொற்றால் அமெரிக்காவில் 40 சதவீதம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் ஆராய்ச்சி யாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

கணித அறிவை காஞ்சன சரிபார்க்க வேண்டும்

மக்களை ஏமாற்றுவதாக சம்பிக்க எம்.பி சாடல்



கடந்த ஓகஸ்ட் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மின்கட்டண திருத்தத்தின் பின்னர், இலங்கை மின்சார சபை இலாபம் அடையவில்லை என்று கூறி, வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மக்களை ஏமாற்றுவதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, பொய்யான மற்றும் தவறான கருத்துகளை வெளியிடுவதற்கு அமைச்சர் தனது கணித அறிவை சரிபார்க்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

எம்.பிக்களிடமும் வரி அறவிடவும்

பா.நிரோஸ்

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தோல்வியடைவோம் என்கிற மனநிலை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிடமோ அல்லது எமது கட்சியின் தலைவரிடமோ இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் சந்திரசேனா தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கான சக்தி எமக்கு இருக்கிறது. பல்வேறு சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே நாம் கடந்த காலங்களில் தேர்தலில் போட்டியிட்டிருந்தோம். இவ்வாறு போட்டியிட்ட நாம் அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றியையும் பெற்றுகொண்டிருந்தோம் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஷாருக்கான் உடையில் நாடகம் நடிக்கிறார் ரணில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஷாருக்கான் போல உடையணிந்து நாடகமாடிக் கொண்டிரு க்கின்றார் என தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டால் அமைச்சர் காஞ்சன உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசாங்கமும் வீட்டுக்குச் செல்ல நேரிடும் எனவும் எச்சரித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர யாரோ வழங்கிய கயிற்றை விழுங்கிவிட்டார். அதனாலேயே மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க முயலுகிறார். இந்த முயற்சியின் பிரதிபலனாக காஞ்சன விஜேசேகர வீட்டுக்கு செல்லப்போகிறார்.

தொடர்ச்சி P2

தேசிய பூங்காக்களில் டொலரில் டிக்கெட்

யால தேசிய பூங்கா உட்பட இலங்கையில் உள்ள தேசிய பூங்காக்களுக்கு வருகை தரும் வெளிநாட்டு பிரஜைகள், எதிர்காலத்தில் அமெரிக்க டொலரில் பணம் செலுத்தி நுழைவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்ய முடியும் என்று வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்துக்கு உதவும் வகையில் டொலரை தேடும் நோக்கில் நடவடிக்கை எடுக்குமாறு விடயதான அமைச்சர் மஹிந்த அமரவீர, அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய தேவையான ஏற்பாடுகளை செய்துள்ளதாகவும் இந்த மாதம் முதல் யால தேசிய பூங்காவில் இருந்து இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் சந்திர ஹேரத், அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

கடும் தீர்மானங்களை எடுக்கவே நேரிடும்

பாராளுமன்ற அரசியலமைப்பு சபையை ஸ்தாபித்தல் உள்ளிட்ட நாட்டின் அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பது தொடர்பாக ஏனைய அரசியல் கட்சிகளுடன் நடத்தும் கலந்துரையாடல் என்பன தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதிநிதிகள் குழுவுக்கு விளக்கமளித்ததுடன், தூதுக்குழு அந்த நடவடிக்கைகள் தொடர்பில் தமது பாராட்டுகளை தெரிவித்தது. தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் தொடர்பான பணிப்பாளர் தினுக் கொழம்பகே, உள்ளிட்ட பலர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சின்னத்...

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனு படிவங்கள் ஏற்கெனவே அச்சிடப்பட்டு உரிய தேர்தல் அதிகாரிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அறிவித்துள்ளார். 340 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான வேட்புமனு கோரும் அறிவித்தல் நேற்று (04) மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஊடாக வெளியிடப்பட்டதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான உறுப்பினர்கள் எதிர்வரும் மார்ச் 20ஆம் திகதிக்குள் நியமிக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்கான தேர்தல் எதிர்வரும் மார்ச் 10ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட்ட வேண்டுமென தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய...

அண்மைய நாள்களில் யால தேசிய பூங்காவுக்கு அதிகளவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதால், பார்வையாளர்களுக்கு வழங்கப்படும் வசதிகளை உடனடியாக மேம்படுத்துமாறும் அமைச்சர் அமரவீர, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மூடிய அறைக்குள்...

இச்சம்பவம் தொடர்பான விசாரணையில் சாட்சியமளிப்பதற்காக தினேஷ் ஷாப்டரின் மனைவி, நிறுவனத்தின் பணிப்பாளராக இருந்த டிரிஸ் பெரேரா மற்றும் பொரளை மயானத்தில் பணியாற்றும் இருவர் நீதிமன்றத்துக்கு சமுகமளித்திருந்ததுடன், எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு நீதவான் விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டன.

டிசெம்பர் 15ஆம் திகதி, கைகள் மற்றும் கழுத்து கட்டப்பட்ட நிலையில் பொரளை பொது மயானத்தில் தனது காருக்குள் கண்டுபிடிக்கப்பட்ட தினேஷ் ஷாப்டர், தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அன்றிரவு உயிரிழந்தார். இந்தச் சம்பவம் குறித்து 140 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர், விசாரணையில் முன்னேற்றம் இல்லை என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நொண்டி சாட்டுகளுக்கு...

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இவ்வாறு பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், "மாற்றத்தினை கோரி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு தற்போது ஜனநாயக நீதியாக ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இவ்வாறு கிடைத்துள்ள வாய்ப்பினை அவர்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். எனவே அவர்கள் அனைவரும் ஆர்வமாக இந்தத் தேர்தலுக்கு தயாராக வேண்டும்.

அரசாங்கத்தில் இருக்கும் ஒரு சிலர் நிதி இல்லை எனச் சொல்லும் நொண்டி சாட்டுகள் தொடர்பில் கரிசனை செலுத்தாமல், அனைவரும் தேர்தலுக்கு தயாராக வேண்டும் என்றார்.

அதேபோன்று உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரியவிடம் மேலும் பல விடயங்கள் தொடர்பில் நாம் பேசியிருந்தோம்.

குறிப்பாக வட்டாரங்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையிலான சில செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இதற்கு ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் துணை போகும் வகையில் செயற்படுகின்றனர். எனினும், மட்டக்களப்பு மாவட்டத்தினை பொறுத்தவரையில் வட்டாரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டுமே ஒழிய குறைக்கப்பட்டக் கூடாது. இந்த விடயத்தினை நாம் இன்றைய தினம் வலியுறுத்தியுள்ளோம்." என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனவரி 23...

அதேபோல் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஜனவரி 18ஆம் திகதி முதல் ஜனவரி 21ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும், 20ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை கட்டுப்பணத்தைச் செலுத்த முடியும் எனவும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எம்.பிக்களிடமும்...

கடந்த காலங்களில் எம்மிடம் சில தவறுகள் காணப்பட்டன. எவ்வாறாயினும் தேர்தலில் போட்டியிட்டால் தோல்வியடைவோம் என்கிற மனநிலை கட்சியிடமோ அல்லது கட்சியின் தலைவரிடமோ இல்லை.

உலகளவில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரவல் காரணமாகவே, நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. எவ்வாறாயினும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இரசாயன உரம் மீதான தடையை விதித்து தவறிழைத்திருந்தார். இந்தத் தவறை அவரே ஒப்புக்கொண்டுள்ளார். இது மாத்திரமே எங்களால் மேற்கொள்ளப்பட்ட தவறு. இதனை தவிர வேறு தவறுகளை நாம் செய்யவில்லை.

மாகாண சபை தேர்தலை நல்லாட்சி அரசாங்கமே காலந்தாழ்த்தியது. அவர்களே மாகாண சபைகளை உருவாக்கினார்கள். நாம் தேர்தலைக் காலந்தாழ்த்த எந்தவிதமான முயற்சிகளிலும் ஈடுபடவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளோடு சேர்த்து மாதாந்தம் சுமார் 3 இலட்ச ரூபாய் வரையில் சம்பளமாகக் கிடைக்கிறது. இவர்களுக்கும் வரி அறவிடப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பஸ் கட்டணங்கள்...

எரிபொருள் கட்டணங்கள் அதிகரித்துள்ளதால் உற்பத்தி செலவுகளும் அதிகரித்துள்ளன எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் பஸ்கள், பயணிகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 50 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் பஸ்களின் கட்டணங்களை அதிகரிக்கும் அல்லது குறைக்கும் அதிகாரம் தனக்கு இல்லை என்றார்.

மாத்தறை, கொழும்பு, கொட்டா வரையிலான அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிப்பதற்கான அனுமதி பத்திரங்களைக் கொண்ட 240 பஸ்கள் காணப்படுகின்றபோதிலும், வெறும் 60 -70 பஸ்களே இப்போது சேவையில் ஈடுபடுகின்றன. காலியிலிருந்து கொட்டாவ வரையிலான நெடுஞ்சாலையில் பயணிக்கும் 28 பஸ்களில் தற்போது வெறும் 15 பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன என்றார்.

இவ்வாறான நிலையில் அதிவேக நெடுஞ்சாலையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்களுடன் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் ஊடாக, இந்தப் பஸ்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப கட்டணங்களை 11 இலட்சத்து 906 ஆயிரமாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால், நேற்று (04) நள்ளிரவு முதல் அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் பஸ் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார் .

அதுபோல காலி வீதியூடாக கொழும்பிலிருந்து கதிர்காமம் நோக்கிப் பயணிக்கும் அதிசொகுசு பஸ்கள் என்கிற பிரிவும் நீக்கப்படுவதாகவும் அமைச்சர் அறிவித்தார்.

இதனால், இந்தப் பஸ்களில் இதுவரையில் 1,541 ரூபாய் அறவிடப்பட்டுவந்த நிலையில் இனி அக்கட்டணம் 1,117 ரூபாயாகக் குறைக்கப்படும் எனவும், காலி வீதியூடாக கொழும்பு - கதிர்காமத்துக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 28 பஸ்களும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் இணைக்கப்பாட்டுக்கு வந்துள்ளன எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, டீசல் விலை குறைக்கப்பட்டிருந்தால் தனியார் பஸ் கட்டணங்களை ஒரே நாளில் விலை குறைப்பை மேற்கொள்ள முடியாது. எவ்வாறாயினும் இது தொடர்பில் ஆராய்ந்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தனக்கு அறிக்கை ஒன்றை வழங்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

கொரோனாவின் புதிய...

குறித்த பிறழ்வால் இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் மூவர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதுடன், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியத்திலும் பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கொரோனாவின் பரவல் மற்றும் தொற்றாளர்களின் சடுதியான அதிகரிப்பு குறித்து இலங்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று சுகாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

செவ்வாய்க்கிழமை (03) நாட்டில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்கள் ஐவரில் மூவர் கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கணித அறிவை...

அமைச்சர் காஞ்சனவால் செவ்வாய்கிழமை (03) வெளியிடப்பட்ட செலவின பிரதிபலிப்பு மின்சார விலை சூத்திரத்துக்கான உத்தேச கட்டண கட்டமைப்பின் விவரங்களை மேற்கோள்காட்டியே சம்பிக்க எம்.பி, நேற்று (04) வெளியிட்ட தனது டுவிட்டர் பதிவில் மேற்குறிப்பிட்ட விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் கட்டணங்களை அதிகரித்திருக்காவிடின் இலங்கை மின்சார சபைக்கு 1,100 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நீர், மின்சாரத்தின் பயன்பாடு முறையே 635.5 மற்றும் 655.0 ஜிகா வோட் என்று பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் மின்சார சபையின் செலவு குறைக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஓகஸ்ட் மாதத்திலும் 633.9 ஜிகா வோட் நீர் மின்சாரத்தை மின்சாரசபை பயன்படுத்தியுள்ளதாக குறிப்பிட்ட பாட்டலி எம்.பி, பகுதியாக அமல்படுத்தப்பட்ட மின்கட்டண அதிகரிப்புடன் 900 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டதாக குறிப்பிட்டார்.

எனவே, மின் கட்டண அதிகரிப்பால் இலாபம் பெறப்பட வில்லை என்றும் நீர் மின்சார பயன்பாடு காரணமாகவே சபைக்கு இலாபம் கிடைத்ததாக அமைச்சர் வெளியிட்ட கருத்துக்கு சம்பிக்க எம்.பி மேற்குறிப்பிட்ட பதிலை வழங்கியுள்ளார்.

பிணையாளர்களுக்கு...

மேலும், ஊடக அறிக்கைகளுக்கு அமைய அவர் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக வாழைத் தோட்டம் பொலிஸாரால் மன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

குறித்த விடயத்தை கவனத்தில் கொண்ட நீதிமன்றம், எதிர்வரும் மார்ச் மாதம் வழங்கப்பட்டுள்ள வழக்குத் தவணையின் போது நீதிமன்றத்தில் முன்னிலையாக்குமாறு பிணையாளர்களுக்கு அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

ஷாருக்கான் உடையில்...

ஒட்டுமொத்த அரசாங்கமும் வீட்டுக்கு செல்லப்போகின்றது.

மக்கள் சுமையை அதிகரித்து தரகு பணங்களுக்காக இவ்வாறு மின் கட்டணத்தை அதிகரிப்பது என்பது காஞ்சன விஜேசேகர செய்யும் பாவச் செயல். மக்களின் பணத்தை கொள்ளையடிக்க வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

மூவேளை உணவுக்கு வழியின்றி நாட்டு மக்கள் இருக்கும்போது, மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதால் மக்களுக்கு என்ன நடக்கும் என்பதை அறிந்துகொள்ள முடியாதளவுக்கு சிறுபிள்ளையாக காஞ்சன இருக்கிறார் என்றார்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நடிகர் ஷாருக்கான் போல ஆடையணிந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிக் கொண்டிருக்கிறார். நாட்டு மக்களால் விரட்டியடிக்கப்பட்ட கூட்டத்துக்கே ரணில் தலைவர். எனவே அந்த நாடகங்களை ரணில் நிறுத்திகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்குப் பதிலாக, திருட்டு ராஜபக்ஷர்கள் கூட்டத்தைப் பாதுகாத்துகொண்டிருக்கும் ரணில் போன்ற ஜனாதிபதி நாட்டுக்கு தேவையா எனவும் வினவினார்.

"ஆக்கிரமிப்பு இராணுவமே மாவீரர் துயிலும் இல்லங்களை சிதைக்காதே"

ஆர்.ஜெயஸ்ரீராம்

"ஆக்கிரமிப்பு இராணுவமே மாவீரர் துயிலும் இல்லங்களை சிதைக்காதே; ஸ்ரீ லங்கா இராணுவமே எமது மண்ணில் இருந்து வெளியேறு" போன்ற கோஷங்களை எழுப்பியவாறு, குறித்த வாசகம் எழுதிய பதாகையை ஏந்தியவாறு, மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் கவனயீர்ப்பு போராட்டம் புதன்கிழமை (04) மேற்கொள்ளப்பட்டது.

கிரான், தரவை மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுவினரால் ஒழுங்கமைக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான ப.அரியநேத்திரன் ஞா.சிறிநேசன், மாநகர மேயர் தி.சரவணபவன், செங்கலடி பிரதேச சபை தவிசாளர் சி.சர்வானந்தன், செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் சி.வவானந்தன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட பொறுப்பாளர் த.சுரேஸ் ஏற்பாட்டு குழுவின் உறுப்பினர்களான கு.வி. லவக்குமார், எஸ்.நிதர்சன் மாவீரர்களின் உறவுகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

துயிலும் இல்லத்துக்கு முன்பாக ஒன்று கூடியவர்கள் "இராணுவமே வெளியேறு", "துயிலும் இல்லங்களை

அபகரிக்காதே", "வன இலகா என்ற போர்வையில் நில ஆக்கிரமிப்பு செய்யாதே", "மாவீரர்களை அவமதிக்காதே", "எங்கள் நிலம் எமக்கு வேண்டும்", "ரணில் அரசே பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டாதே" போன்ற கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு, வன பாதுகாப்பு திணைக்களம், 'தொப்பிகல ஒதுக்கு காடு' எனப் பெயர் பொறித்து, துயிலும் இல்லத்தில் திடீரென நடப்பட்டதாக கூறப்படும் பெயர் பலகையையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கற்கலால் எறிந்து சேதப்படுத்தி அப்பகுதியில் இருந்து பிடுங்கி அகற்றினர். அங்கு நடப்பட்டிருந்த மரக்கன்றுகளும் பிடுங்கப்பட்டன.

கிரான், தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் 2022 நவம்பர் மாதம் 25, 26 ஆம் திகதிகளில் மாவீரர் தினம் தொடர்பான பதாகை காட்சிப்படுத்தப்பட்ட போது அவை கிழித்தெறியப்பட்டிருந்தன.

பின்னர் குறித்த பிரதேசத்தில் மரக்கன்றுகள் நடுவதற்கான ஏற்பாடுகளை அரச இராணுவ புலனாய்வாளர்கள் மேற்கொண்டாகத் தெரிவித்து, தரவை ஏற்பாட்டுக் குழுவினருக்கும் புலனாய்வு பிரிவினருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. மரக்கன்றுகள் நடும் விடயத்திற்கும் தமக்கும் தொடர்பில்லையென வாழைச்சேனையில் அமைந்துள்ள வன இலாகா திணைக்கள அதிகாரி தெரிவித்திருந்தார்.

தற்போது அதே இடத்தில் குறித்த திணைக்கள அமைச்சின் பெயர் தாங்கிய பெயர் பலகை இடப்பட்டு மரக்கன்றுகளும் நடப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக இரு சாராருக்கும் இடையில் மாறி மாறி சச்சரவுகள் இடம்பெறுவது தொடர் கதையாகவுள்ளது. மேற்படி விடயத்தினை கண்டித்தும் குறித்த செயற்பாட்டினை நிறுத்தி தருமாறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

எனவே மாவீரர் துயிலுமில்லங்களை ஆக்கிரமிப்பு செய்யும் செயற்பாடுகளை அரசாங்கம் கைவிடும் வரையில் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைக்கு செல்வதில்லை என்ற தீர்மானத்தை தமிழ்க் கட்சிகள் எடுக்க வேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வலியுறுத்தினர்.

வி.ஐ.பி சோசலிசவாதிகளின்

கிண்டல்களுக்கு சளைக்கமாட்டேன்

சஜித் பிரேமதாஸ

பஸ்களை வழங்குவதே இன்று சகலரினதும் பேசு பொருளாக மாறியுள்ளதாகவும், அதனால் தனக்கு 'பஸ் மேன்' என கிண்டலடிக்கின்றனர் எனவும் தெரிவிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இவ்வாறு கின்டலடிப்பது வி.ஐ.பி மற்றும் வி.வி.ஐ.பி சோசலிசவாதிகள், இத்தகைய காட்போர்ட் இடதுசாரிகளின் கின்டல்களை தான் பொருட்படுத்துவதாக இல்லை எனவும் தெரிவித்தார்.

விமர்சனங்களை விட விடயதானங்கள் ஆலோசிக்கப்பட வேண்டும் எனவும், இவ்வாறான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முதன்மை நோக்கம், இந்நாட்டில் கல்வியில் காணப்படும் பிளவைக் குறைப்பதே என தெரிவித்தார்.

சோசலிசம் பற்றிப் பேசுபவர்கள், ஆடம்பர வசதிகளை அனுபவிக்கிறார்கள் எனவும், நாட்டின் குழந்தைகள் பாதிக்கப்படும்போது அவர்களின் குழந்தைகள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் படிக்கிறார்கள் எனவும், ஆடம்பர குளிரூட்டப்பட்ட கட்சி அலுவலகங்களை நிர்மானித்து, இப்படியான கிண்டல்களைச் செய்வதன் மூலம் இத்தகைய காட்போர்ட் சோசலிஸ்டுகளுக்கு ஏமாற மாட்டோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பஸ்களை வழங்குவதன் மூலம் கல்வியில் நிலவும் வேறுபாடுகளை களையவே தாம் முயற்சிப்பதாகவும், நாட்டிலுள்ள செல்வந்தர்களின் பிள்ளைகள் சர்வதேச பாடசாலைகளுக்கும் தனியார் பாடசாலைக்கும் செல்வதாகவும், அவர்கள் அனைத்தையும் ஆங்கில மொழியில் கற்றுக்கொள்கின்றனர் எனவும் அரச பாடசாலைகளில் இத்தகைய போக்கு மிகவும் குறைந்த மட்டத்தில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

கொழும்பை மையமாகக் கொண்ட பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகள் கணினி ஆய்வகங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள், மொழி ஆய்வுக்கூடங்கள் போன்றவற்றைக் கொண்டிருக்கின்றன என்றாலும், கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் அவ்வாறான வசதிகள் இல்லை எனவும், இதன் காரணமாக கல்வியில் பெரும் பாகுபாடு ஏற்பட்டுள்ளதாகவும், இப்பிரிவை இல்லாதொழித்து அனைவருக்கும் சமமான கல்வி முறையை உருவாக்குவதற்கான முதற்கட்டமாக பஸ் விநியோகம் மேற்கொள்ளப்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஓயாத முயற்சிகளின் பலனாக

கடற்றொழில் சார் பிரச்சினைகளுக்கு தீர்வு

அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தொடர்ச்சியான முயற்சிகளின் பலனாகவே, அறுவடையின் பின்னர் பழுதடையும் கடலுணவுகளின் தொகையை குறைப்பதற்கான குளிரூட்டல் பொறிமுறை உருவாக்கப்பட்டு சம்பிரதாயபூர்வமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அறுவடைக்குப் பின்னர் பழுதடைகின்ற கடலுணவுகளின் அளவைக் குறைப்பதன் மூலம், உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் கடற்றொழிலாளர்களுக்கான வருமானத்தை அதிகரிக்கும் வகையில், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் நிதிப் பங்களிப்புடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிநடத்தலில் உருவாக்கப்பட்டுள்ள நவீன தொழில்நுட்ப பொறிமுறையை, பலநாள் மீன்பிடிக் கலன்களில்

பொருத்துவதற்கான முன்மாதிரி திட்டம், பிரதமர் தினேஸ் குணவர்த்தனவால் நேற்று (04) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

டிக்கோவிற்ற மீன்பிடித் துறைமுகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தொடர்ந்தும் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "கடலுணவுகள் அநியாயமாக விரயமாவதை குறைத்து, கடற்றொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் புதிய பொறிமுறையை உருவாக்குவதற்கு உதவி செய்த, கடற்றொழில் அமைச்சு திணைக்களங்களுக்கும், ஏனைய துறைசார் திணைக்களங்களுக்கும் இவ்விடத்தில் நன்றிகூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்களுடைய கடற்றொழில் சமூகம் எதிர்கொள்ளும் ஏனைய பல பிரச்சினைகள் இருக்கின்றன.

அந்தப் பிரச்சினைகளுக்குமான தீர்வுகளை தேடிக்கொண்டு, அதற்கான கண்டுபிடிப்புகளையும் ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். அதுபோல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்தன இருவரும் அடிக்கடி என்னுடன் பேசும்போது உள்ளூர் குளங்கள், ஆறுகளில் மீன் வளர்ப்பு தொடர்பாக அபிப்பிராயத்தையும் உற்சாகத்தையும் வழங்கி வருகிறார்கள். அதற்கு தேவையான நிதி உதவிகளையும் வழங்குவதாக கூறியிருக்கிறார்கள்" என்று தெரிவித்தார்.

மல்வானே பஞ்சாசார தேரரை சந்தித்தார் பிரதமர் தினேஷ்

பிரதமர் தினேஷ் குணவர்தன வரலாற்று சிறப்புமிக்க நவகமுவ ரஜமஹா விகாரையின் தலைமை தேரரும் ஸ்ரீ கல்யாணி சாமக்ரி தர்ம மகா சங்க சபையின் மகாநாயக்க தேரருமான மல்வானே பஞ்சாசார தேரரை சந்தித்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க நவகமுவ ரஜமஹா விகாரை மற்றும் பத்தினி தேவாலயத்தில் நேற்று (04) இடம்பெற்ற சமயக் கிரியைகளில் கலந்து கொண்ட பிரதமர் தினேஷ் குணவர்தன, விகாரையின் தலைமை தேரர் ஸ்ரீ கல்யாணி சாமக்ரி தர்ம மகா சங்க சபையின் மகாநாயக்க தேரர் மல்வானே பஞ்சாசார தேரரை சந்தித்து ஆசி பெற்றார்.

இந்திய உயர்விருது பெறும் நடேசனுக்கு சஜித் வாழ்த்து

'பிரவசி பாரதிய சம்மான்' விருது பெறவுள்ள 'வீரகேசரி' பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளர் சிவகுமார் நடேசனுக்கு எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தி தலைவருமான சஜித் பிரேமதாஸ வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

17 ஆவது 'பிரவசி பாரதிய சம்மான்' விருதானது இந்திய குடியரசுத் தலைவரால், வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த கௌரவமாகும்.

இந்த விருது வழங்கும் வைபவம், எதிர்வரும் 8 ஆம் திகதியில் இருந்து 10 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது. வெளிநாடு வாழ் இந்தியர்கள் தினத்தின் அங்கமாக, மத்திய பிரதேசத்திலுள்ள இந்தூரில் இவ்விருது விழா நடைபெறவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் வாழ்த்துச் செய்தியில், இந்தக் கௌரவத்தை இவ்வருடம் தனதாக்கிய குமார் நடேசனின் பன்முக சமூக சேவை, இந்தியாவின் தேச நலனைப் போலவே இலங்கையின் தேச நலனிலும் குறிப்பிடத்தக்க துறைசார் பங்களிப்பை நல்கி இருக்கும் என நம்புகிறேன்.

ஜனநாயக கட்டமைப்பிற்குள் ஏற்றுக்கொள்ளத்தக்க சேவை ஊடாக, மூலோபாய நலன்களுடன் எவ்வாறு ஆளுமையை தகவமைப்பது என்பதற்கு குமார் நடேசன் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார். புலம்பெயர் சமூகத்தினரின் தேசிய பங்கேற்புக்கு குமார் நடேசன் சிறந்த உதாரணமாவார்.

இந்திய-இலங்கை நட்புறவுக்கு முந்தைய அனுபவங்களுடன், மேலும் ஆழமான உறவுகளை நிலைப்படுத்த இது அவருக்கு கிடைத்த மகத்தான சந்தர்ப்பம் எனக் கருதுகிறேன்.

புகழ்ச்சிகளை எதிர்பாராது, தன்னார்வ ரீதியாக பல்வேறு சமூக சேவைகளையாற்றிவரும் குமார் நடேசனின் சமூக, நாடு, சர்வதேச பார்வைகள் மென்மேலும் விரிவுபட்டு, புதிய மூலோபாயங்களுடன் பங்களிப்பை நல்க மனதார வாழ்த்துகிறேன்.

பல்வேறு மட்டங்களைக் கொண்ட சமூக சேவையின், தன்னார்வ சேவையின் இயக்க ஆற்றலை, நுணுக்கமாக அடையாளம் கண்டு, புதிய பெறுமானங்களைச் சேர்ப்பதில் மேலும் உயர்ச்சி பெற வாழ்த்துகிறேன்.

கிடைக்கும் சந்தர்ப்பங்களின் முழுமையான ஆற்றலை தவறவிடக்கூடாது என்பதில் கரிசனையோடு செயற்படும் உங்களுக்கு கிடைத்துள்ள விருதை, பல்கலாசார விழுமியங்களை கைவிட முடியாத ஐக்கிய இலங்கையும் அபிமானம் கொள்கிறது என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வெற்றிப்பாதையை தேர்ந்தெடுப்போம்

எளிதான வழிக்குப் பதிலாக, கடினமான ஆனால் உண்மையான வெற்றிப் பாதையைத் தேர்ந்தெடுப்போம் என தேசிய மக்கள் படையின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல தசாப்தங்களாக பயணித்த அரசியல் பாதையை மாற்ற மக்களை அழைக்கிறோம். இந்த நாட்டோடும், மக்களோடும் நெருங்கிய தொடர்புள்ள அவர்களின் துயரங்களையும் வலிகளையும் அனுபவித்த புதிய தலைமுறைக்கு நமது அரசியல் அதிகாரத்தை மாற்ற வேண்டும். பழைய, தோல்வியடைந்த, மேல்தட்டு குடும்ப அரசியலின் பின்னால் தொடர்வதா அல்லது அதை மாற்றுவதா என்பதை மக்களே முடிவு செய்ய வேண்டும். தற்போதைய அரசியல் போக்கை மாற்றி, எளிய மக்களின் ஆட்சியை உருவாக்க தேசிய மக்கள் சக்தி அழைக்கிறது.

இந்த ஆட்சியாளர்கள் நம் நாட்டை அழித்ததை பொதுமக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். பொருளாதாரம் சீர்குலைந்துவிட்டது என்பதை பொதுமக்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

நாம் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் இருக்கிறோம். ஒன்று பழைய தோல்வியடைந்த காலாவதியான ஆட்சி நம்மை மேலும் அழிவுக்கு இட்டுச் செல்லும். அந்தப் பாதையில் அடியெடுத்து வைத்தால் உலர் உணவு பொதிகள் கிடைக்கும். சிறிது நேரம் வசதியாக இருக்கும். அந்த வழி நம்மை மேலும் அழிவுக்கு இட்டுச் செல்லும். மாறாக நாட்டையும் மக்களையும் காப்பாற்றும் பாதையில் செல்ல நாட்டு மக்களை அழைக்கிறோம். நாட்டை கட்டியெழுப்பும் மக்களை வெற்றிபெறச் செய்யும் தேசிய மக்கள் சக்தியின் ஊடாக மக்கள் மயமான அரசாங்கத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் இரங்கல் தெரிவிப்பு

முன்னாள் பரிசுத்தப் பாப்பரசர் 16 ஆம் பெனடிக்ட் திருத்தந்தை இறைபதமெய்தியதையொட்டி அவருக்கு இரங்கல் தெரிவிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (04) முற்பகல் கொழும்பிலுள்ள அபோஸ்தலிக்க தூதரகத்துக்கு விஜயம் செய்தார். இலங்கைக்கான வத்திக்கான் அபோஸ்தலிக்க தூதுவர் புனித பிரையன் உடேக்வே ஆண்டகையைச் சந்தித்த ஜனாதிபதி, அவருடன் சிறு உரையாடலில் ஈடுபட்டார். ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க, அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் குறிப்பு புத்தகத்தில், இரங்கல் குறிப்பு எழுதியதுடன், பதினாறாம் பெனடிக்ட் பரிசுத்தப் பாப்பரசரின் புகைப்படத்துக்கும் அஞ்சலி செலுத்தினார்.

விமல் கூட்டணி சு.கவுடன் இணைய பேச்சுவார்த்தை

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் உத்தர லங்கா கூட்டணி, பரந்த அணியாக களமிறங்க தீர்மானித்துள்ளதாகவும், அதற்கான ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஒருசில முரண்பாடுகளும் காணப்படுகின்றன. அவற்றை நீக்கிக்கொள்வது குறித்தும் கலந்துரையாடி வருகின்றோம். உருவாகும் பரந்த கூட்டணியின் பெயர், சின்னம் என்பன விரைவில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தலைமைத்துவம் ஒன்றை உருவாக்கி மக்களை வழிநடத்தும் அணியை உருவாக்கவே நினைக்கின்றோம். ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து பயணிக்கவே கலந்துரையாடல் முன்னெடுக்கப்படுகின்றது. அதில் சாத்தியப்பாடுகள் இல்லை என்றால் உத்தர லங்கா கூட்டணி தனியாக தேர்தலை சந்திக்கும் என்றார்.

தேர்தலை பிற்போட அரசாங்கம் சூழ்ச்சிகளை முன்னெடுத்து வருகின்றது. தேர்தலை நடத்த பணம் இல்லை என கூறி, அதற்கான நீதிமன்ற அனுமதியை பெற்றுக்கொள்ள அரசாங்கம் கடுமையான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. தெரிந்தோ, தெரியாமலோ தேர்தல் ஆணைக்குழுவும் இதில் தொடர்புபடலாம். ஆனால் எப்போதாவது தேர்தலை நடத்தித்தானே ஆகவேண்டும். தேர்தலை நடத்தினால் யானைக்கும், மொட்டுக்கும் பாரிய பின்னடைவுகளை சந்திக்க நேரிடும் என்ற அச்சமே காணப்படுகின்றது என்றார்.

புத்தாண்டில் ஆசி வேண்டி

பாராளுமன்ற வளாகத்தில் பூஜை

© Parliament of Sri Lanka

2023 புத்தாண்டில் ஆசி வேண்டி பாராளுமன்ற வளாகத்திலுள்ள ஜய மஹாபோதிக்கு அருகில் விசேட போதி பூஜை நிகழ்வு நேற்று (04) முற்பகல் இடம்பெற்றது. பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற இந்தப் பூஜையை கொழும்பு, களுத்துறை பகுதிகளின் தலைமை தேரரும், கோட்டே சுனேத்ராராமாதிபதியுமான வணக்கத்துக்குரிய அலிக்கேவெல சீலானந்த தேரர் நடத்தினார்.

பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகமும், பாராளுமன்ற பணியாட்தொகுதி பிரதானியுமான குஷானி ரோஹனதீர, உதவி செயலாளர் நாயகம் டிகிரி கே. ஜயதிலக, பாராளுமன்ற திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பாராளுமன்ற செயலகத்தின் பணியாளர்கள் மற்றும் இணைந்த சேவைகளின் பணியாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பாராளுமன்ற பணியாட்களின் பௌத்த சங்கத்தினரால் இந்த ஆசீர்வாத போதி பூஜை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இதன் நோக்கத்தை தெளிவுபடுத்தும் வகையில் வரவேற்புரையை அதன் தலைவர் ஷாந்த வீரரத்ன நிகழ்த்தினார்.

கொழும்பு– யாழ்ப்பாண ரயில் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம்

மேலதிக போக்குவரத்து ஒழுங்குகள்

■ நிதர்சன் வினோத்

வவுனியா - அநுராதபுரம் ஆகிய நகரங்களுக்கு இடையேயான தண்டவாளப்பாதையில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள இருப்பதால் இன்று (05) முதல் இப்பாதையினூடான ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்போது மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்று போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாக, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தலைவர் இ. இரவீந்திரன் தெளிவுபடுத்தினார்.

இக்காலத்தில் பயணிகள் பின்வரும் மூன்று வழிகளில் தமது பயணத்தை மேற்கொள்ள முடியும்.

1. யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரை ரயிலில் சென்று, பின்னர் வவுனியாவிலிருந்து அநுராதபுரம் வரை பஸ்ஸில் சென்று, பின்னர் அநுராதபுரத்திலிருந்து கொழும்பு வரை ரயிலில் பயணிக்கமுடியும்.

2. வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலிருந்து பஸ்ஸில் அநுராதபுரம் வரை பயணித்து, பின்னர் அநுராதபுரத்திலிருந்து கொழும்பு வரை ரயிலில் பயணிக்க முடியும்.

3. யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய மாவட்டங்களிலிருந்து நேரடியாக கொழும்புக்கு பஸ்ஸில் பயணித்தல்

மேற்குறித்த மூன்று வழிகளையும் அடிப்படையாக வைத்து, ஆளுநரின் வழிநடத்தலின் கீழ், வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை போக்குவரத்து சபை, இலங்கை ரயில்வே திணைக்களம், தனியார் பஸ் உரிமையாளர் ஆகியோரின் பங்களிப்புடன் மேலதிக போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பயணிகள் தமக்கு தேவையான ஆசனப் பதிவுகளை மேற்கொள்வதற்காக, ஏற்கெனவே உள்ள ஆசனப்பதிவு உரிமையாளர்களின் ஊடாக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆசனப்பதிவுளை மேற்கொள்வதற்கான தொடர்பு இலக்கங்கள் பொது மக்களுக்கு பத்திரிகைகள் ஊடாக அறிவிக்கப்படும். அத்தோடு யாழ். மத்திய பஸ் நிலையத்திலும் காட்சிப்படுத்தப்படும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு யோ. நோபெட் ரவிச்சந்திரன் (போக்குவரத்து உத்தியோகத்தர் - 0772385784), சி. சித்ராங்கன் (பஸ் நிலைய பொறுப்பதிகாரி, யாழ்ப்பாணம் - 0765378432), ஈ. கோபிதன் (பஸ் நிலைய பொறுப்பதிகாரி, வவுனியா - 0779276242 ஆகியோரை தொடர்புகொள்ள முடியும் என்றார்.

சம்பளத்தைவிட

மேலதிக கொடுப்பனவுகளுக்கும் வரி

எதிர்ப்பு தெரிவித்து கையெழுத்து சேகரிப்பு

■ எம்.எஸ்.எம் ஹனீபா

நாட்டில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு உள்ள குறிப்பிட்ட தொகைக்கு மேல் மாதச் சம்பளம் பெறும் அரச ஊழியர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை ஏற்றுக் கொண்டுள்ள போதிலும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு மேலதிகமாக வழங்கப்படும் ஆராய்ச்சிகளுக்கான கொடுப்பனவு, மருத்துவ செலவு என்பவற்றுக்கும் வரி விதிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசாங்க ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தின் அடிப்படையில் விதிக்கப்பட்டுள்ள வரியை, மீள்பரிசீலனை செய்யுமாறு கோரி தென்கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தால் கையொப்பம் திரட்டும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எம் சமீம் தெரிவித்தார்.

அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் ஒன்றிணைந்து அனைத்து பல்கலைக்கழகங்களிலும் முன்னெடுத்துள்ள கையொப்பம் திரட்டும் வேலைத் திட்டத்துக்கு அமைய தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் கையொப்பம் திரட்டும் பணி நடைபெற்றது.

இது தொடர்பான கோரிக்கைகள் அடங்கிய மகஜர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட உள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளருக்கு பிரிவுபசாரம்

■ ரீ.எல் ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்ட செயலாளராகக் கடமையாற்றிய கணபதிப்பிள்ளை கருணாகரனுக்கான பிரிவுபசார நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தலைமையில், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவருபரஞ்சினி முகுந்தன் (காணி), பிரதேச செயலாளர்களும் திணைக்களங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு வரவேற்பு

■ கே.எல்.ரீ யுதாஜித்

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின், மண்முனை மேற்கு கோட்டத்தால், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியத்தை வரவேற்கும் நிகழ்வு, மண்முனை மேற்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு. முருகேசபிள்ளை தலைமையில் குறிஞ்சாமுனை சக்தி வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் (03) நடைபெற்றது.

தேசிய ரீதியில் வெளியிடப்பட்ட க.பொ.த (சா/த) பெறுபேறுகளின் அடிப்படையில் 2020ஆம் ஆண்டு 89ஆவது இடத்தில் இருந்த மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம், 2021 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பரீட்சை பெறுபேறுகள் மூலம் 43ஆவது இடத்துக்கும் மாவட்டத்தில் இரண்டாம் நிலைக்கும் முன்னேற்றிய பெருமை அகிலா கனகசூரியத்தை சாரும்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் 1 நிர்வாகியாக 2016 ஆம் ஆண்டு முதல் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

வீடுகளில் குடும்பங்கள் இல்லை

■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் அமைக்கப்பட்ட நிரந்தர வீடுகளில், குடும்பங்கள் வசிக்காத 300 இற்கும் மேற்பட்ட வீடுகளை, வேறு பயனாளிகளுக்கு மாற்றுவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றத்தின் போது உதவி நிறுவனங்களாலும் இந்திய அரசாங்கத்தாலும் நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டன. இவற்றில், பல்வேறு காரணங்களை கூறி, வீடுகளைப் பெற்றவர்கள், அவ்வீடுகளில் வசிக்கவில்லை என, கிராம அலுவலர்களால் பிரதேச செயலாளர்களுக்கு அறிக்கைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

குடும்பங்கள் வசிக்காத வீடுகளில் சட்டவிரோத, சமூக சீரழிவான செயற்பாடுகள் நடைபெறுவதாக, கிராம அலுவலர்களுக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் இவ்விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. ஆனால், இவ்விடயம் தொடர்பாக தீர்வு காணப்படவில்லை.

ஒட்டுசுட்டான், பனிக்கன்குளம், துணுக்காயின் உயிலங்குளம், 50 வீட்டுத் திட்டம் உட்பட மாவட்டத்தின் கரைதுறைபற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் பல வீடுகளில் குடும்பங்கள் வசிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மூங்கிலாறு பிரதேச வைத்தியசாலையில்

மருந்து கிடைக்காமையால் போராட்டம்

■ கே. கீதாஞ்சன்

நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக சென்றும், மருந்து இல்லாத காரணத்தால் திருப்பி அனுப்பப்படுவதாகவும் மருத்துவர் இல்லாத நிலையை நிவர்த்தி செய்யக்கோரியும் பிரதேச மக்கள் மருத்துவமனை முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தை நேற்று (04) முன்னெடுத்தனர்.

'நிறுத்தாதே நிறுத்தாதே மருந்து வழங்குவதை நிறுத்தாதே', 'வேண்டும் வேண்டும் நிரந்தர வைத்தியர் வேண்டும்' போன்ற பதாகைகளை தாங்கியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மருத்துவ சேவையைப் பெற்றுக்கொள்ளும் மருத்துவமனையாக விளங்கும் மூங்கிலாறு பிரதேச மருத்துவமனையில், சிகிச்சைக்காக செல்லும் நோயாளர்களுக்கு மருந்து கிடைப்பதில்லை என்றும் சிறுவர்கள் முதல் முதியவர்கள், கர்ப்பிணி தாய்மார்கள், மாதாந்த சிகிச்சை பெறுவர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மூங்கிலாறு மருத்துவமனைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்க வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தார்கள்.

'ஸஹிரியன்'களால் மைதானம் சிரமதானம்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி பழைய மாணவர் அமைப்பான 'ஸஹிரியன்' 90 மாணவர்களால், கல்லூரி மைதானம் சிரமதானம் மூலமாக துப்புரவு செய்யப்பட்டது.

மைதானத்தில் புல்பூண்டுகள் நிறைந்திருந்ததால், மாணவர்கள் விளையாடும்போது மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொண்ட நிலையில், இந்தச் சிரமதான நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சகல தமிழ் அரசியல் கட்சிகளும்

ஓரணியாக திரள வேண்டும்

மட்டக்களப்பில் தொடர் போராட்டம்

■ கே.எல்.ரீ யுதாஜித்

வடக்கு, கிழக்கு மக்களின் நிரந்தர அரசியல் தீர்வுக்காக, வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியாகத் திரள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் தொடர் போராட்டம் நடத்தப்பட உள்ளது.

இன்று ஐந்தாம் திகதி 10 மணிக்கு, மட்டக்களப்பு காந்தி பூங்காவில் ஆரம்பமாகும் இந்தப் போராட்டம், பத்தாம் திகதி வரை தொடர் போராட்டமாக இடம்பெற உள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில்

ஓய்வு மண்டபம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் நோயாளர் நலன்புரி சங்கத்தால் சுமார் ஐந்து மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஓய்வு மண்டபம் நேற்று (04) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வெளி மாவட்டங்களில் இருந்து வரும் நோயாளர்கள், நோயாளர்களை பார்வையிட வருவோர் தங்கி இருக்கக்கூடிய வகையில் குறித்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

நோயாளர் நலன் புரிச்சங்கத்தின் தலைவர் க முருகவேள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் என். சரவனபவன், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் டொக்டர் சுகந்தன் மற்றும் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரின்

பணிக்கு இடையூறு ஏற்படுத்திய இருவர் கைது

■ கே. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட தியோநகர் பகுதியில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், கிராமசேவை உத்தியோகஸ்தர் ஆகியோரின் பணிக்கு இடையூறு ஏற்படுத்தியமை மற்றும் தாக்க முயன்றமை தொடர்பில் இருவரை முல்லைத்தீவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தியோநகர் கடற்றொழிலாளர்களின் கரைவலைப்பாட்டு காணி பிணக்கு தொடர்பாக, நேற்று முன்தினம் (03) மாலை பார்வையிடச் சென்றபோது, இவர்களுக்கும் கடற்றொழிலாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக, பிரதேச செயலாளர் மீது தகாத வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டதுடன் தாக்குதலுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரால், முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து, சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை முல்லைத்தீவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை, காலம் காலமாக கரைவலைப்பாடு மற்றும் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் மீனவர்களின் கடற்கரை பகுதி காணி ஒன்றை, தனியார் ஹொட்டல் கட்டுவதற்காக வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனால் தமது தொழில் நடவடிக்கையை முன்னெடுக்கமுடியாது உள்ளதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

தம்பலகாமத்தில்

தையல் பயிற்சி மாணவர்களின் கண்காணிப்பு

■ ஹஸ்பர்

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் கிராமிய அபிவிருத்தி திணைக்களம் ஊடான தையல் பயிற்சி பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு நேற்று (04) நடைபெற்றது.

குறித்த கண்காட்சியின் அங்குரார்ப்பண வைபவம், புதுக்குடியிருப்பு கிராம சேவகர் கட்டடத்தில், பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களின் சுயதொழில் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியில், சிறுவர் ஆடைகள், கட்டில் விரிப்புகள், தலையணையுறை, சிறுபைகள், கால் துடைப்பான் என 18 வகையான தையல் உற்பத்தி பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன், கிராமிய அபிவிருத்தி திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் எஸ். பத்மராஜா, சமூக சேவை உத்தியோகத்தர் ப. சுதன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். ஆர். பர்ஹானா, சிரேஷ்ட தையல் போதனாசிரியர் ஆர். சர்வேஸ்வரி, ஓய்வு பெற்ற சிரேஷ்ட தையல் போதனாசிரியர் எம்.கே.எல் லீமா ரோசலின் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஆசிரியர்களான கணவனும் மனைவியும்

பாடசாலைக்கு சென்ற வேளையில் வீட்டில் திருட்டு

■ எச்.எம்.எம் பர்ஸான்

ஓட்டமாவடி முதலாம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஆசிரியரின் வீட்டில், நகைகளும் பணமும் திருடப்பட்டுள்ள சம்பவம் நேற்று முன்தினம் (03) காலை இடம்பெற்றுள்ளது.

ஆசிரியர் சேவை புரியும் கணவனும் மனைவியும் பாடசாலைகளுக்குச் சென்ற நேரத்தை பயன்படுத்தி, பட்டப்பகலில் வீட்டின் கூரை வழியாக உட்புகுந்த திருடன், அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 45 பவுண் நகைகளையும் இரண்டு இலட்சம் ரூபாய் பணத்தையும் திருடிச் சென்றுள்ளான்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக, வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விபுலானந்தா தமிழ் ஆரம்பப் பாடசாலையின்

புதிய அதிபருக்கு பெற்றோர் எதிர்ப்பு

■ சுமணசிறி குணதிலக்க

மொனராகலை -விபுலானந்தா தமிழ் ஆரம்பப் பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட புதிய அதிபருக்கு எதிராக, மொனராகலை வலயக் கல்வி அலுவலகத்துக்கு முன்பாக, அமைதிப் போராட்டத்தில் பெற்றோர் புதன்கிழமை (04) ஈடுபட்டனர்.

மொனராகலை- மரகலவத்தை ஸ்ரீ கௌரி வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றியவர்

விபுலானந்த ஆரம்பப் பாடசாலையின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டார்.

அவர் தனது கடமைகளை பொறுப்பேற்க இரண்டாம் திகதி சென்ற போது, பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

எனினும், குறித்த அதிபர், நேர்முகத்தேர்வின் மூலமே நியமிக்கப்பட்டதாகவும் அதனை இரத்துச் செய்ய முடியாதென்றும் மொனராகலை பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் எம்.கே.ஹர்ஷனி சமீரா தெரிவித்துள்ளார்.

வலயக் கல்வி அலுவலகத்துக்கு முன்பாக பெற்றோர், புதன்கிழமை (04)யும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், புதிய அதிபர் பல முறைகேடுகள் மற்றும் ஊழல்களில் ஈடுபட்டுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதால் அவரை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டுமென கோரிநின்றனர்.

இதன்போது, சம்பவ இடத்திற்கு வந்த மொனராகலை பொலிஸ் உத்தியோகத்தர்கள் வலய அலுவலகத்தின் கதவுகளை மூடிவிட்டு அலுவலக வளாகத்திற்குள் செல்வதற்கு பெற்றோருக்கு தடைவித்தனர்.

பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் பணி நிமித்தம் பதுளைக்கு சென்றுள்ளதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்ததையடுத்து அமைதியாக பெற்றோர் கலைந்து சென்றனர்.

சிவனடி செல்கையில் 149 பேர் கைது

■ சுதத்.எச்.எம்.ஹேவா

சிவனொளிபாதமலைக்கு போதைப் பொருட்களுடன் சென்ற 149 பேர் கடந்த 25 நாட்களில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டிசெம்பர் 7ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பல்வேறு போதைப் பொருட்களுடன் சிவனொளிபாதமலைக்குச் சென்ற சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரி விஜித அல்விஸின் ஆலோசனைக்கமைய, சிவனொளிபாதமலைக்கு வரும் வாகனங்கள் பல்வேறு இடங்களில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் போதைப் பொருட்களுடன் வருபவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸ் மோப்ப நாய் பிரிவின் ஸ்டுவட்டும் பங்குகொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இதற்கு மேலதிகமாக ரயில் மூலம் ஹட்டன் ரயில் நிலையத்துக்கு வருகை தரும் யாத்திரிகர்கள் ரயில் நிலையத்தில் சோதனைக்குள்ளானதாகவும் இதன்போதும் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரி விஜித அல்விஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 20 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் இவர்கள் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கருமாரி அம்மனிடம் மீண்டும் கைவரிசை

■ டி.சந்ru

நானுஓயா - டெஸ்போட் கீழ் பிரிவு ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலயத்தை உடைத்து அம்மனின் தங்க நகைகள் மற்றும் உண்டியலிலுள்ள காணிக்கை என்பன கொள்ளையிடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினால் நானுஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை (3) இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை எனவும் விசாரணைகளை மேற்கொள்ளும் நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலயத்தின் பின் கதவு உடைக்கப்பட்டு, 30, 000 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அம்மனுக்கு அணிவிக்கப்பட்டிருந்த

தாலியையும், ஆலய முன்றலில் வைக்கப்பட்டிருந்த உண்டியலும் உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் கூட இவ் ஆலயத்தில் திருட்டு சம்பவம் இடம்பெற்று தங்க நகைகள், உண்டியல் திருட்டு போயிருந்தமை தொடர்பில் நானுஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், இதுவரையிலும் அந்த சம்பவம் தொடர்பிலும் எவரும் கைதுசெய்யப்படவில்லை என ஆலய நிர்வாகத்தினர் குற்றம் சாட்டுகின்றனர்.

பேர்னாண்ட் விளையாட்டு மைதானத்தின்

புனரமைப்பு பணிகள் மீண்டும் ஆரம்பம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

கடந்த 8 வருடங்களாக இடைநடுவில் கைவிடப்பட்ட மாத்தளை பேர்னாட் அலுவிஹார விளையாட்டு மைதானத்தின் புனரமைப்பு பணிகள் நேற்று (4) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்கவின் தலைமையில் இந்த அபிவிருத்தி பணிகள் 50 மில்லியன் ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த நல்லாட்சி காலத்தில் குறித்த மைதானத்தை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அது பூர்த்தி செய்யப்படவில்லை. இதனால் மாத்தளை மாவட்டத்தில் உள்ள விளையாட்டு

வீரர்கள், பாடசாலை மற்றும் விளையாட்டுச் சங்கங்களின் விளையாட்டு வீரர்கள் தமது பயிற்சிகளை முன்னெடுக்க முடியாமல் பாரிய சிரமங்களை எதிர்நோக்கினர்.

இந்த நிலையில், தற்போதை விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் தலைமையில் புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், இதில் மாத்தளை நகர மேயர் எஸ். பிரகாஸ், நகர ஆணையாளர் எம்.யூ. நிசாந்த உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

விழிப்புணர்வு செயற்றிட்டம்

நாடு பூராகவுமுள்ள பாடசாலை ரீதியிலான விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் முதல்நாள் நிகழ்வு, பசறை – கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையில் நடைபெற்றது.
(நடராஜா மலர்வேந்தன்)

பிரதிக் கல்விப்பணிப்பாளர் நடராஜன் வெங்கடேஸ்வரன்

■ எம்.செல்வராஜா

ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ்ப் பிரிவுக்கு பொறுப்பாக பிரதிக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட நடராஜன் வெங்கடேஸ்வரன் தனது கடமைகளை புதன்கிழமை (04) பொறுப்பேற்றார்.

கல்வி நிர்வாக சேவையில் பத்து வருட அனுபவத்தை கொண்ட இவர் ஆசிரியராகவும், அதிபராகவும், கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும், மாகாண தமிழ்க் கல்வி அமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், சரீனா பேகம் வெலிமடை பிராந்தியக் கல்விப் பணிப்பாளராகவும், எஸ். விமலவீர வியலுவ பிராந்தியக் கல்விப் பணிப்பாளராகவும் மற்றும் சாரங்கி ஹெட்டியாராச்சி பண்டாரவளை பிராந்தியக் கல்விப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறு வழங்கப்பட்ட நியமனங்கள் நியமனங்கள் உடனடியாக அமலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் ஊவா மாகாண பிரதம செயலாளர் பி.பி.விஜேரத்னவிடம் வினவியபோது,இரண்டு வாரங்களில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு மீண்டும் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு தகுதியானவர்கள் சம்பந்தப்பட்ட பணியிடங்களில் நியமிக்கப்படுவர் என்றார்.

பணிப்பாளராகவும் இறுதியாக மாகாண கல்வித் திணைக்களத்தில் கணித பாடத்திற்கு பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் விஞ்ஞான இளமானிப் பட்டம் பெற்று, அதே பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பின் விஞ்ஞானக் கல்வி டிப்ளோமாவை பெற்றதுடன், கல்வி முகாமைத்துவத்துக்கான முதுமாணிப் பட்டத்தையும் இவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேருஜிக்கான யோசனை

ஏகமனதாக நிறைவேறியது

■ எஸ். கே. குமார்

நுவரெலியா மாநகர சபையில் 30 வருடங்களாக உறுப்பினராகவும் பிரதி முதல்வராகவும் இருந்த எல். நேருஜி தற்பொழுது சுகவீனம் காரணமாக கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அவரின் சேவையை கௌரவித்து அவருக்கு தேவையான உதவிகளை நுவரெலியா மாநகரசபை மூலம் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற யோசனை மாநகர சபையில் நிறைவேற்றப்பட்டது.

ஜனவரி மாதத்துக்கான கூட்டம் புதன்கிழமை (04) நடைபெற்றது. அதன்போது நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் என். பி.கீ.தயாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட யோசனை ஏகமானதாக நிறைவேற்றப்பட்டது.

பல வருடங்களாக புனரமைக்காத வீதி

■ என்.ஆராச்சி

யட்டியாந்தோட்டை நகரிலிருந்து சீபொத் ஊடாக நாகஸ்தனை வரையான 5 கிலோமீற்றர் வரையான வீதியானது பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளது.

இதனால், குறித்த வீதியூடாக நடந்து செல்வதில் கூட சிரமங்கள் காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியூடாக நாவலப்பிட்டியிலிருந்து பெலம்பிட்டிய வரை இரண்டு தனியார் பஸ்களும் சேவையில்

ஈடுபடும் நிலையில் வீதி மிக மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது.

எனவே, குறித்த வீதியை விரைவில் புனரமைப்பு செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வழங்கப்பட்ட நியமனங்கள் ஒரே நாளில் இரத்து

தினைக்களம், அலுவலகங்களில் செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

■ சுமணசிறி குணதிலக

கல்வி நிர்வாக சேவையின் அதிகாரிகள் குழு ஓய்வு பெற்றதையடுத்து, ஊவா மாகாண கல்வி அமைச்சின் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் நியமனங்கள் மறுநாளே இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் ஊவா மாகாண கல்வி திணைக்களம் மற்றும் வலய அலுவலகங்களில் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலின் 30/12/2022 ஆம் இலக்க 1/8/1/4 கடிதங்கள் மூலம் 01/01 ஆம் திகதி முதல் ஊவா மாகாண கல்விப் பணிப்பாளராக ரோஹித அமரதாச, மேலதிக கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

அத்துடன், J.M. சேனாதீர, தம்மிக ஹேரத் பதுளை பிராந்தியக் கல்விப் பணிப்பாளராகவும், சரத் ரணசிங்க பசறை பிராந்தியக்

ஓய்வுபெற்ற அதிபர் கௌரவிக்கப்பட்டார்

■ பி.கேதீஸ்

33 வருட கல்விச் சேவையிலிருந்து கடந்த 31ம் திகதி ஓய்வு பெற்ற, நுவரெலியா Good Rest Convent இன் அதிபர் ஜெயலக்ஷிமி பாலகிருஸ்ணன், மாணவர்களால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

1993ஆம் 1994ஆம் ஆண்டுகளில் குறித்த அதிபரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் அவர் இறுதியாக கடமையாற்றிய Good Rest Conventக்குச் சென்று அவரை அங்கு

கௌரவித்தனர்.

இதன்போது நுவரெலியா கல்வி வலயத்தின் மேலதிக வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.மோகன்ராஜ், நுவரெலியா கல்வி வலய கல்வி அபிவிருத்தி பணிப்பாளர் கணேஸ்ராஜ், கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஜெகதீஸ்வரன், பாடசாலையின் உப அதிபர் தமயந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

விசேட தேவையுடைய குழுவினர்

ஆவது தடவையாகவும் சிவனடியைத் தரிசித்தனர்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நாட்டின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த விசேட தேவையுடைய குழுவினர் சிவனொளிபாதமலையை 6 ஆவது தடவையாகவும் தரிசித்துள்ளனர்.

ஹோமாகம பிரதேசத்தைச் சேர்ந்த பிரத்தியேக ஆங்கில வகுப்புகளை நடாத்தி வரும் சனத் அத்தட்டிய

என்ற ஆசிரியர் குறித்த விசேட தேவையுடையவர்களை ஹட்டன் வழியாக சிவனொளிபாதமலைக்கு அழைத்து வந்திருந்தார்.

அநுராதபுரம், குருநாகல், மெல்சிறிபுர, எல்பிட்டிய, பிலியந்தல, பாதுக்க மற்றும் ஹோமாகம பிரதேங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட விசேட தேவையுடையவர்களும் பிக்குகள் சிலரும் இந்த வருடம் முதலாம் திகதி அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இவர்கள் நல்லத்தண்ணியிலிருந்து சிவனொளிபாதமலைக்குச் செல்ல 12 மணித்தியாலங்களும் அங்கிருந்து கீழே வர 12 மணித்தியாலங்களும் சென்றதாகவும் இவர்களுக்கான உணவு, மருந்துப் பொருள்கள் உள்ளிட்ட அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது என சனத் அத்தட்டிய தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத செயற்பாடுகளால்

குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மாவட்டத்திலுள்ள நீர் ஆதாரங்களை அண்மித்த பகுதிகளில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத செயற்பாடுகளால் மாத்தளை மாவட்டத்தில் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதை தவிர்க்க முடியாது என கெபெக் ஸ்ரீ லங்கா அமைப்பின் பணிப்பாளரும் சுற்றாடல் ஆர்வலருமான காமினி ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்டத்தில் மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் பாதுகாப்பான, பாதுகாப்பற்ற கிணறுகள், கிராமிய நீர்த்திட்டங்கள், குழாய் கிணறு, குளம், வாவி போன்ற இடங்களிலும் பாரிய குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் மாத்தளை மாவட்டத்தின் நக்கிள்ஸ் மலைத்தொடரை சுற்றியுள்ள தோட்ட நிறுவனங்களுக்கு சொந்தமான காணிகளில் மரங்கள் வெட்டப்பட்டுள்ளதாகவும் அதனால் நீர் ஆதாரங்கள் அழியும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாகவும் காமினி ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மக்களின் தலைக்குமேல் சுமையை ஏற்றும் வரி அறவீடுகள்

தற்போது கிடைக்கும் வருமானத்தை வைத்து, வயிற்றை அரைகுறையாக நிரப்பவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருக்கும் நிலையில், புதியபுதிய வரிகள் மக்களின் தலையில் சுமையை ஏற்றிக்கொண்டிருக்கின்றன. ஒரு பக்கம் வரிகள் அதிகரிப்பு, மறுபக்கத்தில் விலையேற்றங்கள், சாதாரண குடிமக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது.

இந்த அதிகரிப்புகள் எல்லாம் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மீதே பெரும் தாக்கத்தை செலுத்துகின்றன. நேரடி வரிகளாக இருந்தாலென்ன, மறைமுக வரிகளாக இருந்தாலென்ன, இல்லையேல் பெறுமதிசேர், கலால் வரிகள், கட்டண அதிகரிப்புகள் எல்லாமே, அளவுக்கடந்த சுமையை திணிக்கின்றன.

புகைப்பொருட்கள், மதுபானங்கள் மீதான கலால் வரி 20 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனூடாக, வருமானத்தை இரட்டிப்பாக்க முடியுமென கலால் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. எனினும், ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட விலை அதிகரிப்பால், மதுபான விற்பனை 40 சதவீதம் குறைவடைந்துவிட்டது என மதுபான நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கலால் வரிகளை அதிகரித்தமையையிட்டு மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால், எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியுமா என்பது சந்தேகமே? அத்துடன் சட்டவிரோதமான மதுபான உற்பத்திகள் அதிகரிக்கும். அதைக் கண்டும் காணாதது போல இருந்துகொள்வதற்கு, பொலிஸ் உள்ளிட்ட தரப்பினருக்கு இலஞ்சம் வழங்கக்கூடும். இது மறுதாக்கத்தை ஏற்படுத்தும்.

இதற்கிடையே எரிபொருட்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டாலும் பெற்றோல், டீசல் மீதான தீர்வையை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அதிகரித்துள்ளது. ஒரு லீற்றர் டீசலின் விலையை 100 ரூபாயால் அதிகரித்துவிட்டு, 10 ரூபாய் குறைத்தால் பஸ் கட்டணங்களை குறைக்கமுடியாதென அகில இலங்கை பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைகளில் பஸ் கட்டணம் 10 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விலைக்குறைப்பு மகிழ்ச்சியை தருவதாக அமைந்தாலும், சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர், அதிவேக நெடுஞ்சாலைகளில் சேவையில் ஈடுபடும் பஸ்களில் பயணம் செய்கின்றனர்.

இவ்வாறான பஸ்களில் பயணம் செய்தவர்களில் பலர், சாதாரண பஸ்கள் அல்லது ரயில்களிலேயே பயணிக்கின்றனர். ஆகையால், அதிவேக நெடுஞ்சாலை பஸ் கட்டண குறைப்பு, சாதாரண மக்களுக்கு நன்மை தராது.

விலைகளை அதிகரிக்கும் போது, சகல மட்டங்களைச் சேர்ந்தவர்களையும் பாதிக்கும் வகையில் அதிகரித்துவிட்டு, ஒரு தரப்பினருக்கு மட்டுமே வரப்பிரசாதம் வழங்கும் வகையில் விலைகள் குறைக்கப்படுகின்றன என்பது மட்டுமே யதார்த்தமாகும்.

விதிக்கப்பட்டிருக்கும் வரிகளின் ஒட்டுமொத்த கூட்டுத்தொகை, ஒருநாள் கிடைக்கும் சம்பளத்தின் அளவை விடவும் விஞ்சி நிற்கின்றது. இதற்கு மேலும் வரி, கட்டண அதிகரிப்புகளை தாங்கிக்கொள்ளும் சக்தி சாரதாண பொதுமக்களுக்கு இல்லை என்பதை நினைவில் கொண்டு. வரிவிவகாரங்களை அரசாங்கம் கையாளவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

எம்மவர்கள், பொதுக்கூட்டங்களின் போது, அங்கு ஆக்ரோஷமாகப் பேசி, தங்கள் திறமையை காட்டிக்கொள்வார்கள். இத்தகைய கூட்டங்களின்போது, அங்குள்ள அங்கத்தினர்கள் தங்களின் பழைய பகைமைகளைக் காட்டிக்கொள்வதுண்டு.

வருடாந்த பொதுக்கூட்டங்களில் அங்கத்தினரிடையே பதவிகள் தெரிவுசெய்யப்படும். அப்பொழுது அவர்களின் உண்மை முகம் தெரியவரும்.

நண்பர்களாக இருந்தவர்களிடையே மனஸ்தாபங்கள் வெளிப்படும். குழுக்காக இயங்கத் தொடங்கி விடுவார்கள். ஊருக்கு ஊர் பொதுக் கூட்டங்கள் இப்படித்தான் இப்போது நடைபெறுகின்றன. இத்தகைய கூட்டங்களைப் பார்க்கும் ஊரவர்களுக்கும் கலகலப்பாகத்தான் இருக்கும்.

ஒற்றுமையாக கூட்டம் கூடி, செய்ய வேண்டிய கருமங்களை வினைத்திறனுடன் செய்வதை விடுத்து, நீயா, நானா எனப் போட்டியிடுதல், கண்டபடி வார்த்தைகளைப் பிரயோகித்தல் போன்றவை வெட்டகப்பட வேண்டியவை. பதவிகளைக் கேட்டு, அதன் பின்னால் ஓடக்கூடாது. அது தானாக வந்தால்த்தான், பதவி வகிப்பவருக்கும் கௌரவம்; பதவிக்குரிய பொறுப்பும் காரியங்களும் நிறைவேற்றப்படும். வெறும் பவிசுக்காகப் பதவியைப் பெறுபவர்களால் காரியங்கள் சித்தியடைவதில்லை. பொதுநல விடயங்களில் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். அதுவே, நாகரிகமாகும்.

–பருத்தியூர் பாலு வயிரவநாதன்

மாவை மீதான விக்கியின் திடீர்ப் பாசம்!

சுயநலவாதிகளின் நாடகம்

புருஜோத்தமன் தங்கமயில்

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் தலைமையில் தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து, பரந்துபட்ட கூட்டணியை அமைக்க வேண்டும் என்று, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி விக்னேஸ்வரன் அண்மையில் தெரிவித்திருக்கின்றார்.

மாவையை "தலைமைத்துவ ஆளுமையற்றவர்" என்று தொடர்ச்சியாகக் கூறி வந்த விக்னேஸ்வரன், திடீரென்று மாவையின் தலைமையில் கூட்டணி அமைப்போம் என்ற அறிவித்தலை விடுக்கிறார் என்றால், அதன் பின்னணியை ஆராய வேண்டி ஏற்படுகிறது.

வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பால், விக்னேஸ்வரன் நேரடி அரசியலுக்கு அழைத்துவரப்பட்டு 10 ஆண்டுகளாகப் போகிறது. விக்னேஸ்வரன், இந்த 10 ஆண்டுகளுக்குள் ஏழு ஆண்டுகள் கூட்டமைப்பையும் அதன் தலைவர்களையும் "ஏதும் செய்ய இலாயக்கற்றவர்கள்; தமிழ் மக்களின் துரோகிகள்" என்ற விமர்சனங்களை முன்வைத்து, புதிய கட்சியை ஆரம்பித்திருந்தார்.

அதுவும், 2015 பொதுத் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்னர், கனடிய ஊடகமொன்றுக்கு விக்னேஸ்வரன் வழங்கிய செவ்வியொன்றில், கூட்டமைப்பின் தலைவர்களை, 'ரணிலின் அடிமைகள்' என்ற தோரணையில் விமர்சித்திருந்தார். குறிப்பாக, மாவையை "அரசியல் அறிவே அற்றவர்" என்று குறிப்பிட்டிருப்பார். இந்தச் செவ்வியின் பகுதிகளை வெட்டியொட்டி, கூட்டமைப்புக்கு எதிரான தரப்புகள், பொதுத் தேர்தல் காலத்தில் பரப்பிக் கொண்டிருந்தன.

அந்தச் செவ்வி குறித்து ஆரம்பத்தில் அமைதி காத்த விக்னேஸ்வரன், தேர்தல் அண்மித்த நாள்களில், கூட்டமைப்புக்கு எதிரான அறிக்கையொன்றை 'வீட்டுக்கு வெளியே வந்து தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்' என்று பொருள்பட வெளியிட்டார். இந்த அறிக்கையின் பின்னணியில், யாழ். மையவாத புத்திஜீவிகளும் வைத்தியர்களும் சில அரசியல் பத்தியாளர்களும் இருந்தார்கள்.

அவர்கள், தமிழ்த் தேசிய அரசியலில் அரிச்சுவடி படித்துக் கொண்டிருந்த விக்னேஸ்வரனை, இரா. சம்பந்தனுக்கு மாற்றான தலைவராகக் காற்றடித்து பெரிப்பித்தும், ஜனவசிய வட்டம் வரைந்தும் கொண்டுமிருந்தார்கள். அன்று விக்னேஸ்வரனிடத்தில் ஆரம்பித்த 'தமிழின தலைவர்' என்ற அடையாளத்துக்கான ஆசை இன்றளவும் அடங்கவில்லை.

விக்னேஸ்வரன், தன்னை முன்னிறுத்திய அனைவரையும் நட்டாற்றில் விட்டுவிட்டு வந்தவராவார். நீதிபதியாக இருந்து ஓய்வுபெற்று வீட்டில் இருந்தவரை, தமிழ் அரசியலுக்குள் அழைத்து வந்த சம்பந்தனையும் எம்.ஏ சுமந்திரனையும் ஏமாற்றியதுடன், அவரை முதலமைச்சராக்கிய கூட்டமைப்பை, தமிழினத்துக்கு துரோகமிழைக்கும் கட்சியாக பேசியிருக்கிறார்.

அது மாத்திரமின்றி, விக்னேஸ்வரனை நம்பி, கூட்டமைப்பில் இருந்து விலகிச் சென்று அவரோடு இணைந்தவர்களை, கடந்த பொதுத் தேர்தல் வெற்றிக்காக பயன்படுத்திவிட்டு, கறிவேப்பிலைகள் மாதிரி தூக்கியெறிந்துவிட்டார். தேர்தல் வெற்றிக்காக தேவைப்பட்ட சுரேஷ் பிரேமசந்திரன், அருந்தவபாலன், அனந்தி சசிதரன் ஆகியோரிடம் எந்த ஆலோசனைகளையும் அவர் நடத்துவதில்லை. அரசியல் முடிவுகளை தனிப்பட்ட ரீதியிலேயே எடுத்து அறிவிப்பார். அறிவித்த பின்னர்தான், தமிழ் மக்கள் கூட்டணி என்கிற அமைப்பில் இருக்கிற மற்றவர்களுக்கே தெரியும்.

அப்படியான நிலையில், விக்னேஸ்வரனின் தலைமையில் இன்னொரு தேர்தலில் போட்டியிடும் நிலையில் மற்றவர்கள் இல்லை. இது விக்னேஸ்வரனை சிந்திக்க வைத்துவிட்டது. அதுதான், மாவை மீதான திடீர் பாசத்துக்கு காரணம். விக்னேஸ்வரனை முன்னிறுத்திக் கொண்டு இன்னொரு தேர்தலுக்கு செல்வதற்கு இன்றைக்கு யாரும் தயாராக இல்லை. தோல்வி நிச்சயம் என்கிற நிலையில்தான், அவரை மாவையின் தலைமையை ஏற்க வைத்திருக்கின்றது.

இன்றைக்கு தமிழரசுக் கட்சி, மாவையின் கட்டுப்பாட்டில் இல்லை. கட்சியின் தேசிய மாநாடு ஒன்று நடத்தப்பட்டால், மாவை கட்சித் தலைவர் பொறுப்பில் இருந்து தூக்கி வீசப்படும் நிலை இருக்கின்றது. சுமந்திரனோ, சிவஞானம் சிறிதரனோ கட்சியின் தலைவராகிவிடுவார்கள். அதனால், கட்சியின் தேசிய மாநாட்டை, கட்சி யாப்பு விதிகளை மீறி நடத்தாமல் மாவை தட்டிக் கழித்து வருகின்றார்.

அப்படியான நிலையில், கட்சியை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக மாவை, ஏனைய கட்சிகளின் தலைவர்களிடம் சரணடைந்திருக்கிறார். சுமந்திரனோ, சிறிதரனோ தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்கு வந்துவிட்டால், கூட்டமைப்புக்குள் டெலோ, புளொட்டின் நிலை மோசமான கட்டங்களை அடைந்துவிடும். அதைத் தடுப்பதற்காக, மாவை தொடர்ந்தும் தமிழரசுக் கட்சியின் தலைமையில் இருக்க வேண்டும் என்று செல்வமும், சித்தார்த்தனும் விரும்புகிறார்கள். அந்தப் புள்ளியை விக்னேஸ்வரனும் பிடித்துக் கொண்டு, குறுக்கு வழியில் ஓட நினைக்கிறார்.

வடக்கு முதலமைச்சர் பதவி என்பது, மாவையின் தீராக் கனவு. அந்தக் கனவை நனவாக்க, தாங்கள் துணை நிற்பதாக அவரிடத்தில் செல்வமும் சித்தார்த்தனும் உறுதி அளித்திருக்கிறார்கள். இப்போது விக்னேஸ்வரனும் அதற்கு இசைந்திருக்கின்றார். இந்த இசைவு என்பது, சம்பந்தன் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை. மாவையை முதலமைச்சர் என்ற கட்டத்துக்குள் வடக்குக்குள் சுருக்கிவிடலாம். அப்படியான நிலையில், கூட்டமைப்பின் மூத்த தலைவர் என்ற கட்டத்தை தான் அடைந்து கொள்ளலாம் என்பது விக்னேஸ்வரனின் எண்ணம். ஏனெனில், செல்வமும் சித்தார்த்தனும், சுமந்திரன், சிறிதரன் தலைமையில் இயங்குவதைக் காட்டிலும் விக்னேஸ்வரனை தங்களது தெரிவாகக் கொள்வார்கள்.

இந்தச் சூத்திரங்களின் புள்ளியில் நின்றுதான், தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் கூட்டமைப்புக்குள் இணைப்பது என்ற நிலைப்பாட்டையும் மாவையின் தலைமையில் கூட்டணி அமைக்கப்பட வேண்டும் என்ற விக்னேஸ்வரனின் அறிவிப்பையும் புரிந்து கொள்ள வேண்டும்.

மாவையின் அரசியல் நீண்ட பாரம்பரியங்களைக் கொண்டது. ஆனால், அவருக்கு இன்று கட்சியை வழிநடத்தத் தெரியவில்லை. தன்னுடைய பதவி ஆசைக்காக கட்சியை காட்டிக் கொடுக்கும் நிலைக்கு வந்துவிட்டார். அதனால், பங்காளிக் கட்சிகள், கடந்த காலங்களில் தமிழரசுக் கட்சியை தோற்கடிப்பதற்காக ஒன்றிணைந்தவர்களுடனும் கூட்டு வைக்கத் தயாராகிவிட்டார்.

தமிழரசுக் கட்சியின் அடுத்த மத்திய குழுக் கூட்டம் எதிர்வரும் ஏழாம் திகதி மட்டக்களப்பில் நடைபெற இருக்கின்றது. இந்தக் கூட்டத்தில், மாவை மீது தேசிய மாநாட்டைக் கூட்டுமாறு நெருக்கடி விடுக்கப்படலாம். குறிப்பாக, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு முன்னர், அதனை கூட்டுமாறு அழுத்தங்கள் வழங்கப்படலாம். அந்த அழுத்தங்களை "... பார்க்கலாம் தம்பி..." என்று வழமைபோல மாவையால் தட்டிக்கழிக்க முடிந்தால், அவரின் தலைமைப் பதவி இன்னும் சில மாதங்களுக்கு தப்பிப்பிழைக்கும்.

மற்றப்படி, முதலமைச்சர் கனவுக்காக அவர் கட்சியை மற்றவர்களிடம் அடகு வைக்கும் நிலையை, தமிழரசின் அடுத்த கட்டத் தலைவர்கள் யாரும் விரும்பவில்லை. குறிப்பாக, தமிழரசின் தலைமைத்துவத்துக்கு வரத்துடிக்கும் சுமந்திரன் அணியும் சிறிதரன் அணியும் விரும்பவில்லை. இரண்டு அணிகளும், தேசிய மாநாடு ஒன்று நடந்தால், அதில் தலைமைத்துவத்தை அடைவதற்காகப் படை பட்டாளங்களைச் சேர்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா வரை கட்சியின் தொகுதிக் கிளைகளுக்குள் சுமந்திரன் ஆதரவை தேடிக் கொண்டிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டை, தீவகம், காங்கேசன்துறை தவிர்ந்த தொகுதிகள் சுமந்திரனை ஆதரிக்கும் நிலையில் இருக்கின்றன.

சிறிதரனைப் பொறுத்தளவில் கிளிநொச்சி, மன்னார் மற்றும் சுமந்திரனுக்கு எதிரான அணிகளுடன் கூட்டு என்று ஆதரவு திரட்டும் வேலைகளை கமுக்கமாக நடத்திக் கொண்டிருக்கிறார். இதுதான், தமிழரசின் இன்றைய நிலைமை.

மாவை, இன்று இருக்கும் நிலையில், முதலமைச்சர் கனவை அடைவதற்கான வாய்ப்புகள் என்பது மிகமிக அரிது. அதைச் சொந்தக் கட்சிக்காரர்களே நிறைவேற்றத் துணிய மாட்டார்கள். இப்படியான நிலையில், விக்னேஸ்வரனின் 'குயுக்தி' ஆட்டம் பலிப்பதற்கான வாய்ப்புகள் இல்லை.

தேர்தல் அரசியலில் இலாப நட்டக் கணக்குகளைப் பார்த்து, கூட்டணிகள் அமைவது சாதாரணமானவை. இந்தக் கூட்டணிகளுக்குள் கொள்கை, கோட்பாடு என்ற எதுவும் இருப்பதில்லை. தேர்தல் வெற்றி மாத்திரமே இலக்காக இருக்கும்.

இவ்வாறான கூட்டணிகளால் மக்களுக்கான நன்மைகள் ஏதும் பெரியளவில் நிகழ்ந்ததாக வரலாறுகள் இல்லை. கொள்கை, கோட்பாடுகள், செயலாற்றுவதற்கான திறன், அரசியல் ஒழுக்கம் என்று ஏதுமற்று, சுய இலாபங்களுக்காக 'பரந்துபட்ட கூட்டணி' என்று அறிவித்தலை விடுக்கும் தலைவர்களை, தமிழ் மக்கள் அடையாளம் காண வேண்டும். இல்லையென்றால், தமிழ் மக்களின் தலைகளில் தொடர்ந்தும் மிளகாய் அரைத்துக் கொண்டிருப்பார்கள்.

கழதங்கள்

பாலத்தை புனர்நிர்மாணித்துத் தருமாறு கோரிக்கை

அம்பாறை நகரிலிருந்து பக்மிடியாவ செல்லும் வழியில், புதிதாக போடப்பட்ட 'கார்பெட்' வீதியிலுள்ள பாலம், உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

அம்பாறை நகரிலிருந்து பக்மிடியாவைக்குச் செல்லும் 'கார்பட்' வீதி அமைக்கப்படும் போது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாலத்தைப் பற்றிக் கவனத்தில் கொள்ளாமையே இதற்கு காரணமாக அமைந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இந்தப் பாலம் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய நிலையில் காணப்படுவதுடன், இந்தப் பாலத்தின் இரண்டு ஓரங்களிலும் தடுப்பு அமைப்புகள் எதுவும் நிறுவப்படாமையால், பள்ளத்திலுள்ள ஆற்றில் விழுந்துவிடக்கூடிய ஆபத்தும் காணப்படுகின்றது. குறிப்பாக, இரவு நேரத்தில் இருட்டில் பயணிக்கும் சந்தர்ப்பங்களில், தடுப்பு அமைப்பு இன்மையால் பள்ளத்துக்குள் குடைசாயக்கூடிய ஆபத்து அதிகளவில் காணப்படுகின்றது.

எனவே, ஏதாவது அனர்த்தம் இடம்பெற்ற பின்னர் நடவடிக்கை எடுக்காமல், 'வெள்ளம் வரும் முன்னர் அணைகட்டுவது போல்', பாலத்தை பாதுகாப்பான பயணத்துக்கு உரியதாக அமைத்துத் தருவதில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

அஸ்ஹர் இப்றாஹிம்

வெறுத்த நடையும் முக்கோண பழங்களும்

சங்கீர்த்தனா அருளானந்தம் (யாழ்ப்பாணம் பல் கலைக்கழகம்)

"தூங்கிவிட்டேனாம் அதை பெரிய துக்கமாக கூறுகிறார்கள்" போன்ல அலாரம் காலை 6 மணிக்கு வச்சிட்டு தூங்கினநான் விடிய ஒன்பது மணிக்கு விரிவுரை என்பதை மறந்து எட்டு மணி வரைக்கும் தூங்கிவிட்டேன்.

அவசரமாக எழும்பி தயாராகி விட்டு பார்த்தால் ஒன்பது மணி ஆகியிருந்தது. காலையிலேயே ஓட்டப்பந்தயம் போல் ஓடினோம் நானும் எனது நண்பியும். பேருந்துக்காக காத்திருந்தபோது மனதில் அவ்வளவு பயம் கொந்தளித்துக் கொண்டே இருந்தது. " இன்றைக்கு நாங்க ரெண்டு பேரும் நல்லா ஏச்சு வாங்க போறோம்" என நானும் எனது நண்பியும் பேசிக்கொண்டோம். அவ்வளவு நேரமாகியும் பேருந்து வரவில்லை. பயம் அதிகமாகிக் கொண்டே இருந்தது. நேரம் போய்க் கொண்டே இருந்தது. வயிற்றில் புளியை கரைத்து ஊற்றியது போல் ஒரு பயம் எழுந்து கொண்டிருக்கும் போது அந்த அர ராத்தல் பாண் பஸ் வந்து நின்றது ஒரு பக்கமாய் சாய்ந்த படி.

"உள்ள போங்கோ உள்ள போங்கோ" என்று அவசர அவசரமாக நடத்துனர் உள்ளே தள்ளிக் கொண்டிருக்க, போனது அந்த பஸ். மூச்சு எடுக்க முடியாமல் அவ்வளவு சனம் அதில் தொங்கிக் கொண்டே நின்றனர். ஏதோ ஒரு இடத்தில் இறக்கி விட்டான் அந்த பாஸ்காரன். பஸ் மீதி காச கூட கொடுக்காமல் வேகமாக போய்விட்டான். அது வேற கவலையாக இருந்தது.

நான் அதைப்பற்றி புலம்பிக்கொண்டே வேகமாக நடந்து கொண்டிருந்தேன். அதை பார்த்து என் நண்பி சிரித்துக்கொண்டே வந்தாள். ஒரு வழியாக விரிவுரைக்குச் சென்றோம். இதயம் துடிப்பது வெளியில் சத்தம் கேட்கிறது

இருவருக்கும். மெதுவாக காலை எடுத்து வைத்து உள்ளே நுழைய முற்பட்ட போது எங்களது விரிவுரையாளர் "என்ன டைம்" என்று கேட்டார். எங்கள் இருவருக்கும் அப்படி ஒரு புகழாரம் சூட்டப்பட்டது. அன்றைய வகுப்பு நேரம் வரைக்கும் இருவரின் முகமும் வாடிப்போன பூ போல தான் இருந்தது. இந்த சோகத்துடனே வகுப்பு முடிந்தது. அந்த சோகத்துடனேயே நானும் எனது நண்பியும் விடுதி நோக்கி நடக்கத் தொடங்கினோம்.

சூரியன் பல்லைக்காட்டி சிரிக்கத் தொடங்கினான். அதிலும் இருவருக்கும் விரிவுரையாளர் திட்டியும் உறைக்கவில்லை. விரிவுரையாளர் திட்டியதையும் சொல்லி சிரித்துக் கொண்டே நடந்து வந்தோம். இடையிடையே சோகமாகவும் முகம் மாறியது. அந்த அர ராத்தல் பஸ்ஸும் வரவில்லை. பொடி நடையாக நடந்து கொண்டே இருந்தோம். வெயிலும் பசியும் சற்று அதிகமாகவே இருந்தது.

நடந்து கொண்டே இருக்கும் போது தூரத்தில் செம்மஞ்சள் நிறத்தில் முக்கோண முக்கோணமாக காணப்பட்டது. நிச்சயமாக அது ஒரு கடை தான். வெயிலில் இருட்டான கண்களை நன்றாக விழித்துப் பார்த்தோம் அது ஒரு பழக்கடை.

அந்த பழக்கடையில் பழங்களை அடுக்கி வைத்த விதம் எங்களை மிகவும் கவர்ந்து விட்டது என்றே சொல்லலாம். எந்த பழக் கடையிலும் இவ்வாறு பழங்களை அடுக்கி வைத்து இருவருமே பார்த்ததில்லை. (சிரித்துக்கொண்டே) ஒரு புகைப்படம் எடுப்போமா எனக்கு கேட்டுக் கொண்டே இருவரும் அருகில் சென்றோம். அந்த பழக்கடைக்கார அண்ணா, நாங்கள் பழங்கள் வாங்கதான் வருகிறோம் என நினைத்திருப்பார் போலும், சிரித்துக்கொண்டே வரவேற்றார்.

நாங்கள் இருவரும் அருகில் சென்று "அண்ணா இந்த பழங்கள் அடுக்கி வைத்தது அழகாய் இருக்கிறது ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ளலாமா?" எனக் கேட்டோம். அவரும் "ஆம் எடுத்துக் கொள்ளுங்கள்" என கூறினார். ஒரு புகைப்படம் எடுத்ததன் பின்னர் தான் ஒரு காணொளி எடுக்கலாம் என தோன்றியது. மீண்டும் அந்த அண்ணாவிடம் "அண்ணா ஒரு வீடியோ எடுத்துக் கொள்ளலாமா?" என கேட்டேன். "ஓம் தாராளமாக எடுங்க" என்று கூறினார்.

புத்தகப் பையில் இருந்த ஒரு 'மைக்' ஐ எடுத்து அவருக்கு கொடுத்துவிட்டு நான் சில கேள்விகளை கேட்க ஆரம்பித்தேன். அண்ணா எங்கிருந்து வருகிறீர்கள் என்றேன். "நான் கொழும்பிலிருந்து வருகிறேன் சொந்த இடம் தலவாக்கலை என்றார். தலைவாக்கலை நுவரெலியா மாவட்டத்துக்குள் வரும்" என கூறினார்.

இந்த பழங்கள் எல்லாம் எங்கிருந்து எடுக்கிறீர்கள் என கேட்டேன். "இந்தியாவில் இருந்து ஓடர் செய்து இங்கே இறக்குமதியாகி விற்பனைக்கு வருகிறது" என்றார். இதற்காகவே சங்கம் ஏதும் இயங்குகிறதா? என கேட்டேன் அதற்கு அவர் "இல்லை இல்லை இதற்காக ஒரு தலைவர் இருக்கிறார். அவர் மூலமாகத்தான் இது இங்கே வருகிறது" என்றார்.

நீங்கள் அவர்களுக்கு கீழ் வேலை செய்கிறீர்களா? என கேட்டேன். அதற்கு அவர் "அந்தத் தலைவரிடம் இருந்து எங்களது முதலாளி பழங்களை எடுத்து தருவார்" என்றார். நானும் ஓ... எனக் கேட்டுக் கொண்டேன். ஒரு மாதுளையை கையில் எடுத்து இது என்ன விலை போகிறது என்ற என்றேன். இது 800 இல் இருந்து 1,000 ரூபாய் வரைக்கும் இருக்கிறது என்றார். தோடம்பழம் என்ன விலை என்றேன், இது ஒரு பழம் 70 அல்லது 71 ரூபாய் என்றார்.

இந்த பழங்கள் ஒன்றும் அடிபட்டு பழுதடையாதா? என கேட்டேன். "இல்லை இல்லை இவை குளிர்பெட்டியில் தானே வரும்" என்றார். இன்னொன்றும் முக்கியமான விடயம் கூறியிருந்தார். இந்த பழங்கள் எல்லாம் ஊசி ஏற்றப்படாத இயற்கை பழங்கள் என்றார். இந்த பழங்கள் எப்படியும் ஒரு கிழமைக்கு வைத்திருக்கலாம் என்றும் கூறினார்.

பழங்கள் விற்றதற்கு ஏற்பவா உங்களுக்கு சம்பளம் என்று கேட்டேன். "இல்லை நாள்ச் சம்பளம் உணவுக்கும் சேர்த்து" எனக் கூறினார். கொழும்பிலிருந்து நீங்கள் மட்டும் தானா வந்திருக்கிறீர்கள்? என்றேன். "இல்லை என்னோடு சேர்த்து மொத்தமாக ஆறு பேர் இங்கு வந்து வியாபாரம் செய்கிறோம்" என்றார். ஒரு நாளைக்கு 50,000 அல்லது 60,000 என வியாபாரமாகும் என்றார். நானும் எனது நண்பியும் ஒருவருக்கொருவர் முகத்தை பார்த்துக்கொண்டோம்.

பேசிக்கொண்டே இருக்கும்போது ஒரு அக்கா வந்து ஒரு மாதுளை 800 ரூபாய் கொடுத்து வாங்கி சென்றார். பின்னர் பேச தொடங்கினோம். அந்த அண்ணா கூறினார், தைப்பொங்கல் வரைக்கும் இங்கே வியாபாரம் செய்துவிட்டு தான் செல்வோம் என்றார். 'அண்ணாவிற்கு குடும்பம் இருக்கிறதோ?' என்று கேட்டேன். "ஆ... இருக்கிறது" என்றார். அதைச் சொல்லும் போதே அவர் முகத்தில் ஒரு சிரிப்பு. நாங்களும் சிரித்துக் கொண்டோம்.

அந்தப் பழங்கள் அடுக்கி வைத்த விதம்தான் எங்களை ஈர்த்து, அந்தப் பழக்கடைக்காரரிடம் பேச வைத்து ஒரு கதையாக உருவாகியது. நாம் கடந்து போகும் ஒவ்வொரு விடயமும் மிகச் சாதாரணமானவைகள் தான். ஆனால் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனித்துவம் இருக்கிறது. சில விடயங்கள் மாத்திரமே எங்களை ஈர்க்கச் செய்கிறது என்பது நிதர்சனம்.

அதன் பின்னர் நானும் எனது நண்பியும் அந்த பழக்கடைக்கார அண்ணனிடம் நன்றி சொல்லிவிட்டு, மீண்டும் அந்த வெறுத்துப் போன நடையை கரம் பிடித்துக் கொண்டோம்.

சென்னை

பெண் பொலிஸ் அதிகாரிகளுக்கு பாலியல் தொல்லை

"பெண் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பாலியல் தொந்தரவு கொடுத்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களைக் கைது செய்யவேண்டும்" என முன்னாள் தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை விருகம்பாக்கம், தசரதபுரத்தில் அண்மையில் தி.மு.க. சார்பில் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பெண் பொலிஸ் அதிகாரிகளுக்கு தி.மு.க உறுப்பினர்கள் சிலர் பாலியல் தொல்லை கொடுத்துள்ள நிலையில், இதனைப் பார்த்த ஏனைய பொலிஸ் அதிகாரிகள், குறித்த நபர்களை மடக்கிப் பிடித்து கைது செய்துள்ளனர்.

இதனால் தி.மு.க தொண்டர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து ஆளும் கட்சியினரின் தலையீட்டால் கைது செய்யப்பட்ட நபர்களைப் பொலிஸார் விடுதலை செய்தனர்.

இந்நிலையில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் இச்சம்பவம் தொடர்பில் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் "அரசாங்க அலுவலகப் பணிகளில் தலையிடுவது, அரசு ஊழியர்களை மிரட்டுவது, பொதுமக்களை மிரட்டுவது, பெண்களுக்கு பாலியல் தொந்தரவு கொடுப்பது என்ற வரிசையில் பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் காவல் துறையினருக்கே பாலியல் தொந்தரவு கொடுக்கும் நிலைக்கு தி.மு.க-வினர் சென்றுவிட்டனர்.

அண்மைக்காலமாக தீவிரவாதிகளுக்கும், பயங்கரவாதிகளுக்கும், சமூக விரோதிகளுக்கும் புகலிடமாக தமிழ்நாடு விளங்கி வருகின்றது.

இதன் காரணமாக பொதுமக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை தமிழ்நாட்டில் நிலவுகிறது.

மேலும், பாலியல் தொந்தரவு கொடுத்தவர்களை விடுவிப்பது என்பது பாலியல் குற்றத்துக்கு தி.மு.க. அரசு துணை போவதற்கு சமமாகும். அத்துடன் அரசின் இத்தகைய நடவடிக்கையானது ' வேலியே பயிரை மேய்வது போல்' உள்ளது.

எனவே குறித்த பெண் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பாலியல் தொந்தரவு கொடுத்த தி.மு.க.வினரை உடனடியாக கைது செய்து, சட்டத்தின்முன் நிறுத்தி அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுக்கொடுக்கவும், தமிழகத்தில் ஊடுருவியுள்ள சர்வதேச போதைப்பொருள் கடத்தல் தலைவன் கஞ்சிபாணி இம்ரான் மற்றும் அவரது கூட்டாளிகளை உடனடியாக கைது செய்து நாடு கடத்தவும் தமிழக அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்" இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சியாச்சி

முதல் பெண் அதிகாரி நியமனம்

சுமார் 15, 600 அடி உயரத்தில் உள்ள உலகின் மிக உயரமான போர்க்களமாக அறியப்படும் 'சியாச்சின் மலை உச்சியில்' பாதுகாப்புப் பணியில் பெண் அதிகாரி ஒருவர் முதல் முறையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

'ஷிவா சவுகான்' என்ற பெண் அதிகாரியே குறித்த பாதுகாப்புப் பணிக்கு நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பனி மலை ஏற்றம், பனிச்சரிவில் சிக்கியவர்களைக் காப்பாற்றுதல், பனிச் சரிவில் இருந்து தப்பிக்கும் முறை உள்ளிட்ட பல்வேறு விதமான தீவிர பயிற்சிகளுக்குப் பின்னர், அவருக்கு இப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய பிரதேசம்

துப்பாக்கிச்சூடு நடத்தி புத்தாண்டுக் கொண்டாட்டம்

மத்திய பிரதேசத்தில் கடந்த 1 ஆம் திகதி புத்தாண்டுக் கொண்டாட்ட நிகழ்ச்சியொன்று நடைபெற்றுள்ளது.

குறித்த நிகழ்சியில் கலந்து கொண்ட காங்கிரஸ் 'எம்.எல்.ஏ சுனில் சரஃப் ', மேடையில் வைத்து, வான் நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இந்நிலையில் அவர் துப்பாக்கிச் சூடு நடத்திய வீடியோவானது இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து இதுதொடர்பில் எம்.எல்.ஏ சுனில் சரஃப் மீது நடவடிக்கை எடுக்க அம்மாநில உள்துறை அமைச்சர் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து சுனில் சரஃப் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ள நிலையில், குறித்த வீடியோவில் காணப்படுவது தீபாவளி துப்பாக்கி என அவர் விளக்கமளித்துள்ளார்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர், ரயில் பயணத்தின்போது மற்றொரு எம்.எல்.ஏவுடன் சேர்ந்து, திருமணமான பெண்ணிடம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டதாக சுனில் சரஃப் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தெலுங்கானா

திருமணம் செய்ததால் வீட்டிற்குத் தீ வைப்பு

தெலுங்கானாவில் காதல் திருமணம் செய்து கொண்ட இளைஞரின் வீட்டுக்குத் தீ வைக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஹஜூராபாத்தைச் சேர்ந்த ராஜசேகர் என்பவர் அதே பகுதியை சேர்ந்த சஞ்சனா என்ற பெண்ணை நீண்டகாலமாகக் காதலித்து வந்துள்ளார்.

இந்நிலையில் அண்மையில் இருவரும் பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த சஞ்சனாவின் தம்பி 'பாலையா' தனது நண்பர்களுடன் சேர்ந்து ராஜசேகர் வீட்டிற்கு சென்று தகராறில் ஈடுபட்டது மட்டுமின்றி தான் வைத்திருந்த பெட்ரோலையும் அவரது வீட்டின் மீது ஊற்றி தீ வைத்துள்ளார்.

இதில் குறித்த வீடு முழுவதுமாக தீப்பற்றி எரிந்த நிலையில் தீயணைப்புத்துறையினர் விரைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஹரியானா

காணாமற் போன மனைவி

கணவருக்குக் காத்திருந்த அதிர்ச்சி

ஹரியானாவின், ரோதக் பகுதியை சேர்ந்தவர் 'கேஹர் சிங்'. 55 வயதான இவருக்கு தர்ஷினி என்ற மனைவி உள்ளார்.

மனநலம் பாதிக்கப்பட்ட தர்ஷினி, கடந்த 2013ஆம் ஆண்டு எதிர்பாராத விதமாகக் காணாமல் போயுள்ளார். இதனால் தர்ஷினியைத் தேடி கேஹர் சிங் வருடக் கணக்கில் தேடி அலைந்துள்ளார். எனினும் எங்கு தேடியும் அவர் கிடைக்காததால் ஒரு கட்டத்திற்கு மேல் தர்ஷினியைத் தேடுவதை அவர் கைவிட்டுவிட்டார் .

இந்நிலையில் 9 ஆண்டுகள் கழித்து தர்ஷினி தற்போது கர்நாடகாவின் குடகு பகுதியில் உள்ள தணல் என்ற காப்பகத்தில் இருப்பதாக கேஹருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

குறித்த காப்பகத்தினால் தர்ஷினிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் அவர் கொஞ்சம் கொஞ்சாக தன்னைப் பற்றி நினைவு கூர்ந்துள்ளார்.

இந்நிலையில் தர்ஷினி கொடுத்த தகவல்களின் அடிப்படையில்,குறித்த காப்பகத்தினர் ஹரியானா பொலிஸாரின் மூலம் கேஹர் சிங்கிற்கு இது குறித்துத் தெரியப்படுதியுள்ளனர்.

இதனையடுத்து 9 ஆண்டுகளின் பின்னர் தனது மனைவியைப் பார்த்த கேஹர் "என் வாழ்நாளின் மிகப்பெரிய பரிசு இது தான்" எனக் கூறி கண்ணீர் மல்க தர்ஷினியைக் கட்டியணைத்துள்ளார்.

இச்சம்பவமானது அனைவரையும் நெகிழ்ச்சியடைய வைத்துள்ளது.

பாகிஸ்தான்

பிளாஸ்டிக் பைகளில் எரிவாயு

கடந்த சில ஆண்டுகளாகப் பாகிஸ்தான் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது.

குறிப்பாக நாட்டில் ஏற்பட்டுள்ள பணவீக்கம் காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்வடைந்துள்ளதால் அந்நாட்டு மக்கள் அன்றாட வாழ்வில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் பாகிஸ்தானில் சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சிலிண்டர்களின் விலை அதிகரித்து வருவதால், எரிவாயு சிலிண்டர் விற்பனையாளர்கள் விநியோகத்தை வெகுவாகக் குறைத்துள்ளனர்.

இதன் விளைவாக அந்நாட்டு மக்கள் சிலிண்டர்களுக்கு பதிலாக பிளாஸ்டிக் பைகளில் எரிவாயுவினை நிரப்பி செல்லும் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பிளாஸ்டிக் பைகளில் எரிவாயுவினை நிரப்பிச் செல்லும் மக்கள் அதில் மின்சாரத்தில் இயங்கக்கூடிய சிறிய உறிஞ்சுக் குழாயைப் பொருத்தி பயன்படுத்தி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்த புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் பிளாஸ்டிக் பைகளில் எரிவாயுவினை நிரப்பிச் செல்வது கையில் வெடிகுண்டினை எடுத்துச் செல்வதற்குச் சமம் என்றும், இதனால் மிகவும் மோசமான விபத்துகள் நிகழும் அபாயம் உள்ளதாகவும் சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முதலாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

இலங்கையை வென்ற இந்தியா

இலங்கைக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற முதலாவது போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:
நாணயச் சுழற்சி: இலங்கை
இந்தியா: 162/5 (20 ஓவ.)
(துடுப்பாட்டம்: தீபக் ஹூடா ஆ.இ 41 (23), இஷன் கிஷன் 37 (29), அக்ஸர் பட்டேல் ஆ.இ 31 (20), ஹர்டிக் பாண்டியா 29 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: வனிடு ஹஸரங்க 1/22 [4], தனஞ்சய டி சில்வா 1/6 [1], மகேஷ் தீக்ஷன 1/29 [4], சாமிக கருணாரத்ன 1/22 [3], டில்ஷான் மதுஷங்க 1/35 [4])

இலங்கை: 160/10 (20 ஓவ.)
(துடுப்பாட்டம்: தசுன் ஷானக 45 (27), குசல் மென்டிஸ் 28 (25), சாமிக கருணாரத்ன ஆ.இ 23 (16), வனிடு ஹஸரங்க 21 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷிவம் மவி 4/22 [4], உம்ரான் மலிக் 2/27 [4], ஹர்டிக் பாண்டியா 0/12 [3])
போட்டியின் நாயகன்: தீபக் ஹூடா
இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது பூனேயில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஈரான்

செஸ் விளையாடியதால் எச்சரிக்கை

செஸ் விளையாடிய ஈரான் வீராங்கனைக்கு," நாடு திரும்ப கூடாது" என எச்சரிக்கை விடுக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈரானில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஹிஜாப்பினை முறையாக அணியவில்லை` எனக் கூறிக் கைது செய்யப்பட்ட 'மஹ்சா அமினி' என்ற இளம்பெண் பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார். இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், ஈரான் அரசுக்கு எதிராக பிரபலங்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈரானில் வசிக்கும் சாராவின் பெற்றோருக்கும், மிரட்டல்கள் விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் ஈரானைச் சேர்ந்த பிரபல செஸ் விளையாட்டு வீராங்கனை 'சாரா காதெம்' என்பவர் அண்மையில் கஜகஸ்தான் நாட்டின், அல்மேட்டி நகரில் நடைபெற்ற சர்வதேச செஸ் சாம்பியன்ஷிப் விளையாட்டு போட்டியில் கலந்து கொண்டிருந்தார்.

25 வயதான அவர் செஸ் விளையாட்டில் ஈடுபடும் போது , ஹிஜாப் அணியவில்லை என கூறப்படுகிறது. ஈரான் நாட்டு அரசின்படி, ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் அவருக்கு பல்வேறு தனிப்பட்ட நபர்களிடம் இருந்து திரும்பி வர கூடாது என்ற வகையில் மிரட்டல் அழைப்புகள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் ஈரானில் வசிக்கும் சாராவின் பெற்றோருக்கும், மிரட்டல்கள் விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இது குறித்து ஈரானின் வெளியுறவு அமைச்சகம் எதனையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தென்கொரியா

'டெஸ்லா' நிறுவனத்துக்கு ரூ. 82 கோடி அபராதம்

எலான் மஸ்கின் டெஸ்லா நிறுவனத்திற்கு இலங்கை மத்திப்பில் சுமார் 82 கோடி ரூபாய் அபராதம் விதிக்கவுள்ளதாக தென் கொரிய அரசு தெரிவித்துள்ளது.

குளிர் காலத்தில், டெஸ்லா கார்களின் மைலேஜ் 50 சதவீதம் வரை குறைவடைவதாகவும், இத்தகவலை மறைத்து, எரிபொருள் செலவை டெஸ்லா கார்கள் மிச்சப்படுத்துவதுபோல் மக்களை ஏமாற்றும் வகையில் விளம்பரப்படுத்தியதாகவும் அந்நிறுவனத்தின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து மின்சாரக் கார்களின் மைலேஜை மிகைப்படுத்தி விளம்பரப்படுத்தியமைக்காக டெஸ்லா நிறுவனத்தின் மீது 82 கோடி ரூபாய் அபராதம் விதிக்கவுள்ளதாக தென் கொரிய அரசு தெரிவித்துள்ளது.

உக்ரேன்

சடலங்களைத் தேடி அலையும் தன்னார்வலர்கள்

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி , உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 10 மாதங்களுக்கு மேலாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

அதே சமயம் உக்ரேனும் ரஷ்யா மீது பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது. இப் போரில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்துள்ள நிலையில் அண்டை நாடுகளுக்கு அகதிகளாக உக்ரேனைச் சேர்ந்த லட்சக்கணக்கான மக்கள் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

இந்நிலையில் போர்களத்தில் வீரமரணமடைந்த உக்ரேன் இராணுவத்தினரின் உடல்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கும் பணியில் உக்ரேனைச் சேர்ந்த தன்னார்வலர்கள் ஈடுபட்டுவருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

"தாய்நாட்டிற்காக உயிர்தியாகம் செய்வோரின் உடல்கள் காடு, கழனிகளில் கேட்பாரின்றி கிடப்பதால், அவற்றை மீட்டு பெற்றோரிடம்கொண்டு சேர்ப்பதன் மூலம் அவர்களது உடல்கள் முறைப்படி நல்லடக்கம் செய்யமுடியும் எனவும்" அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கெதிரான ODI தொடருக்கான

இந்தியக் குழாமில் இணைத்துக் கொள்ளப்பட்ட பும்ரா

இலங்கைக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட தொடருக்கான இந்தியாவின் ஒருநாள் சர்வதேசப் போட்டி (ODI) தொடருக்கான குழாமில் ஜஸ்பிரிட் பும்ரா இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

முதுகுப் பகுதி உபாதை காரணமாக கடந்தாண்டு செப்டெம்பர் மாதத்திலிருந்து போட்டிகளில் பங்கேற்றிருக்காத பும்ரா, அதிலிருந்து பெங்களூருவிலிருந்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தேசிய கிரிக்கெட் அகடமியில் தேறி வந்திருந்தார்.

இந்நிலையில், உடற்றகுதியுடையவர் என அகடமியால் பும்ரா பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

சமநிலையில் ஆர்சனல் நியூகாசில் போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற நியூகாசில் யுனைட்டெட்டுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் சமப்படுத்தியது.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற புல்ஹாமுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி தோல்வியடைந்தது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனுடனான போட்டியில் 1-4 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோல்வியடைந்தது.

அம்பாறை லீக்கின் பி தர கழகளுக்கிடையிலான தொடர்:

சம்பியனாகி 'ஏ' தர கழகமாகிய மருதம்

ஏ.எல்.எம். ஷினாஸ்

அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட லீக்கால் நடாத்தப்பட்ட பி தர கழகங்களுக்கிடயிலான கால்பந்தாட்டத் தொடரில் மருதமுனை மருதம் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

28 அணிகள் பங்குபற்றிய இத்தொடரின் இறுதிப் போட்டியானது மருதமுனை மசூர் மௌலானா மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற நிலையில், மருதமுனை யுனிவரஸ் அணியை வென்றே மருதம் சம்பியனாகி ஏ தர கழகமாகியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் 20ஆவது நிமிடத்தில் மருதம் விளையாட்டுக் கழகத்தின் முன்னணி வீரர் எம்.

எச். சுஜைத் முதலாவது கோலைப் பெற்று தனதணிக்கு முன்னிலையை வழங்கியவாறு முதற் பாதி முடிவுற்றது. பின்னர் 55ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலையும் பெற்று சுஜைத், தனதணியின் முன்னிலையை இரட்டிப்பாக்கினார். போட்டி முடிவடைய 15 நிமிடம் இருக்கையில் யுனிவரஸ் அணி வீரர் எம். நிகால்டீன் ஒரு கோலைப் பெற்றபோதும் இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் மருதம் வென்றது.

அமெரிக்கா

அடுத்தடுத்து 3 வாகனங்கள் மோதல்; 6 பேர் உயிரிழப்பு

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் ஜார்ஜ்வெஸ்ட் பகுதியில் உள்ள நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம்(02) அதி வேகமாக வந்த மினிவேன் ஒன்று முன்னால் சென்றுகொண்டிருந்த வாகனத்தை முந்திச் செல்ல முயன்றுள்ளது.

இதில் கட்டுப்பாட்டை இழந்த வேன், எதிரே வந்த கார் மீது பயங்கரமாக மோதியது. அதை தொடர்ந்து மினிவேனுக்கு பின்னால் வந்த மற்றொரு காரும் மினிவேன் மீது மோதியது.

இவ்வாறு அடுத்தடுத்து நடந்த மோதலில் 3 வாகனங்களில் இருந்தவர்களும் தூக்கி வீசப்பட்டனர். இத்தொடர் விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும், ஐவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தென்னாபிரிக்காவுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில்

முன்னிலையில் அவுஸ்திரேலியா

தென்னாபிரிக்காவுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் முன்னிலையில் அவுஸ்திரேலியா காணப்படுகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் வென்ற அவுஸ்திரேலியா தொடரை ஏற்கெனவே கைப்பற்றிய நிலையில், சிட்னியில் நேற்று ஆரம்பித்த இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் பற் கமின்ஸ், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். அந்தவகையில்

முதலில் துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்திரேலியா, மழையால் பாதிக்கப்பட்ட முதல் நாள் முடிவில் தமது முதலாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், உஸ்மான் கவாஜா 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலுள்ளார். முன்னதாக மர்னுஸ் லபுஷைன் 79 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார். வீழ்த்தப்பட்ட 2 விக்கெட்டுகளையும் அன்றிச் நொர்கியா வீழ்த்தியிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 05 ஜனவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.